Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 29 வெள்ளிக்கிழமை (13-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:229



யாழ்.பல்கலைக்கழக மாணவரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் நேற்று அடையாளப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். கலாசாலைக்கு வெளியே மாணவர்கள் கூடியிருந்த காட்சி. (ஐ-6)

# பாடசாலைகள் செயலிழந்தன!

## சூடு பிடிக்கிறது பல்கலை விவகாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

**பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டமை ஆகியவை காரணமாக உருவான நெருக்கடி முற்றியுள்ளது. இந்தப் பிரச்சினை பாடசாலைகளுக்கும் பரவியதை அடுத்து, குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களும் முழு அளவில் பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர். இதனால் பாடசாலைகள் பெரும்பாலும் முற்றாகச் செயலிழந்துள்ளன.**

வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்ததோடு வலிகாமத்துக்கும் பரவியது.

வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலைகளும் நேற்றுப் பெரும்பாலும் பகிஷ்கரிப்பில் குதித்தன.

அத்துடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியற் கல்லூரி, தொழிநுட்பக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றிலும் பகிஷ்கரிப்பு முழு அளவில் இடம்பெற்றது.

நகரில் சில இடங்களில் பாட

(14ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத் தூதுக் குழு யாழ்.தளபதியுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,ஜூலை13

பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் விடுதலை, பல்கலைக்கழகத்தை மீளத் திறத்தல் ஆகியவை குறித்து தமது தலைமையிலான பல்கலைக்கழகக்குழு ஒன்று யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுடன் நேற்றுக் காலை பலாலி இராணுவத் தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது என்று துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கலந்துரையாடலில் விஞ்ஞானப் பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல், உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன், விவசாய பீடாதிபதி க.இராசதுரை, பேரவை உறுப்பினர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பதில் பதிவாளர் பொ.கந்தசாமி, எழுதுவினைஞர் தொழில்நுட்பவியலாளர் ஒன்றியச் செயலாளர் சி.செந்திற்செல்வன் ஆகியோர் பங்குபற்றினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பைக் கைவிடும்படி கோருகிறார் பொலீஸ் அதிகாரி

யாழ்ப்பாணம்,ஜூலை13

குடாநாட்டில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பாடசாலை மாணவர்கள் தமது எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பகிஷ்கரிப்பைக் கைவிட வேண்டும் என்று யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் என்.சி.குடாகெட்டி கோரியுள்ளார்.

பத்திரிகைகளுக்கு அவர் நேற்று மாலை அனுப்பி வைத்த செய்திக்குறிப்பு ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார். அவர் மீதான மேலதிக விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அவர் விரும்பினால் தாம் நிரபராதி என அங்கு வாதிடலாம்.

பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்துள்ள அழைப்பை ஏற்றுப் பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிப்பில

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை

கொழும்பு,ஜூலை13

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சை யாழ்.மாவட்டத்தில் 76 பரீட்சை நிலையங்களில் இடம்பெறும். (உ-3)

## ஜனாதிபதி - பீரிஸ் நேற்றிரவு சந்திப்பு

கொழும்பு,ஜூலை13

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து இடையில் வெளியேறியதாகக் கூறப்படும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்றிரவு கலந்துரையாடல் இடம்பெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் சுமுகமாகவும் சிநேகபூர்வமாகவும் அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தை இரு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் விடயம் தொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட சமயம் அமைச்சர் பீரிஸ் தமது எதிர்ப்பைக் காட்டும் வகையில் அமைச்சரவையில் இருந்து வெளியேறியதாகச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## உதயனின் விலை அதிகரிப்பு

*அன்பார்ந்த வாசகர்களே!*

**உற்பத்திச் செலவு அதிகரிப்பு, வாழ்க்கைச்செலவு உயர்வு, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி போன்ற இன்னோரன்ன நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கடந்த ஆறு ஆண்டுகளாக இந்தப் பொருளாதாரச் சிக்கல்களுக்கு எல்லாம் முகம் கொடுத்து உதயனின் விலையை அதிகரிக்காமல் மேலதிக செலவினத்தால் ஏற்படும் பளுவை நாமே தாங்கி வந்துள்ளோம். அதேசமயம் உதயனின் பக்கங்களை அதிகரித்து அதே கனதியைத் தொடர்ந்து பேணியும் வந்தோம்.**

**இம்முறை எமது சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில், ஆறு ஆண்டுகளின் பின்னர், உதயனின் விலையினை ஒரு ரூபாவால் உயர்த்த வேண்டியதாயிற்று. அதன்படி நாளை முதல் உங்கள் உதயனின் விலை ஏழு ரூபாவாகும்.**

**எங்கள் நிலைமையை அறிந்து இவ்விலை அதிகரிப்பைப் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றோம்.**

**- நிர்வாகத்தினர்.**

## அல்லாரையில் நடந்த பாலியல் வல்லுறவு தொடர்பாக படையினர் மூவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை13

அல்லாரையில் கடந்த சனியிரவு பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில மூன்று படையினர் நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு பிரதிப் பொலீஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கவின் பணிப்பின் பேரில் யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் என்.சி.குடாகெட்டியின் மேற்பார்வையில் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ.எம்.சேனநாயக்க தலைமையில் விசாரணைகள் மேற்கொண்டுவந்த விசேடகுழு நேற்று இவர்களைக் கைது செய்ததாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதான மூன்று படையினரும் மேல் விசாரணைகளுக்காக கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (உ-3-10)

## எதிர்க்கட்சித் தலைவர்கள் சபாநாயகருடன் இன்று பேச்சு

கொழும்பு,ஜூலை13

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்திருப்பது மற்றும் சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்தவிருப்பது ஆகியவை தொடர்பாக எழுந்துள்ள சட்டப் பிரச்சினைகள் குறித்து இன்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆலோசனை நடத்துகின்றனர்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லமான மும்தாஜ் மஹாலில் இன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறுகின்றது.

நாடாளுமன்றத்தில் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ள சமயத்தில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததன் மூலம் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை அவமதித்துவிட்டதாகவும் -

ஜனாதிபதியின் முடிவு அரசமைப்புச் சட்டத்துக்கு முரணாக அமைந்துள்ளதாகத் தெரிவித்து அதனால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை சபாநாயகர் உடனடியாகக் கூட்ட வேண்டும் என்றும் -

இந்தச் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர்களால் வலியுறுத்தப்படும் என்று தெரிகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சைகள் இரண்டு கட்டங்களாக!

### சர்வஜன வாக்கெடுப்புக் காரணமாக

கொழும்பு,ஜூலை13

அடுத்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக் காரணமாக -

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையை இரு கட்டங்களாக நடத்த பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இத்தீர்மானத்தின் பிரகாரம் -

அடுத்த மாதம் 4ஆம் திகதிமுதல் 17 ஆம் திகதிவரை முதற்கட்டமாகவும் -

27 ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் 4 ஆம் திகதிவரை இரண்டாம் கட்டமாகவும் -

பரீட்சையை நடத்த பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கையை எடுத்துள்ளது.

பரீட்சைக்கான நேரசூசிகையைத் தயாரிக்கும் பணியில் பரீட்சைத் திணைக்களம் தற்சமயம் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு இரண்டு லட்சத்து 29 ஆயிரத்து 527 பேர் தோற்றுகின்றனர்.

நான்கு பாடங்களைக் கொண்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் புதிய அரசமைப்பு

### சந்திரிகா விளக்குகின்றார்

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் அனுமதி கோரப்படும் புதிய அரசமைப்பின் கீழ் -

* நிறைவேற்று அதிகார ஆட்சி முறை ஒழிக்கப்படும்.

* எதிர்க்கட்சிகள் கோரும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும்.

- இவ்வாறு தெரிவிக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்தும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு உத்தரவிட்டும் தான் விடுத்த பிரகடனங்களை நியாயப்படுத்தி நேற்றுத் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பே நாட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு மூலகாரணம். அதைத் தொடர்வதா அல்லது புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் - என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.(உ)

# வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று கோருகிறது பல்கலை மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

அப்பாவிப் பாடசாலை மாணவர்களை இராணுவமும் பொலீஸாரும் வன்முறைக்கு வலிந்து இழுக்கின்றன. ஆகவே மாணவர்கள் எந்த விதமான வன்முறையிலும் ஈடுபட வேண்டாம். அமைதியாக வீட்டில் இருந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இப்படிக் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சக மாணவன் திவ்வியன் விடுதலை செய்யப்படும் வரை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கால வரையறையற்ற பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து வருகிறார்கள். மாணவர்களின் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கின்ற முயற்சியை விடுத்து மாணவர்களின் நியாயமான போராட்டத்தினை நசுக்குகின்ற நோக்கோடு பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. பகிஷ்கரிப்பைக் கைவிட்டால்தான் உடனடியாகப் பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க முடியும் எனத் துணைவேந்தர் கூறிவருகின்றார். பல்கலைகழகத்தில் தனிப்பட்ட ஒரு மாணவனின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை எனில், அந்தப் பல்கலைக் கழகம் தொடர்ந்தும் இயங்கி வருவது, இங்கே நிர்வாகங்கள் சுமுகமாக இயங்கி வருகின்றதென வெளி உலகிற்கு பிரசாரப்படுத்தவே உதவும். ஸ்ரீலங்கா அரசின் அந்த முயற்சிக்கு நாம் முண்டுகொடுக்கத் தயாரில்லை. திவ்வியனின் விடுதலை கிட்டும்வரை மாணவர்களாகிய நாம் பகிஷ்கரிப்பைக் கைவிடப்போவதுமில்லை; பல்கலைக்கழகத்தைத் திறக்க அனுமதிக்கப்போவதுமில்லை. இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்குச் சம்பவித்திருக்கின்ற கோரமான மனித உரிமை மீறல்கள் நாளை தமக்கும் இடம்பெறலாம் என்ற அச்சத்துடன் - தமக்காகக் குரல் கொடுத்துவந்த மாணவனின் விடுதலைக்காக - குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களும் பாடசாலையைப் புறக்கணித்து பகிஷ்கரித்து வருகின்றனர். ஆனால் இன்றையதினம் (12-07-2001) பாடசாலையைப் பகிஷ்கரித்து வீடுதிரும்பிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் பொலீஸாரினாலும் ஆயுதப் படையினராலும் கொக்குவில் பகுதியிலும் வேம்படிப் பகுதியிலும் வைத்துத் தாக்கப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று பாடசாலைக்குச் செல்லாது வீடுதிரும்பிக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் சென். ஜோன்ஸ் பாடசாலை அருகில் படையினரால் தாக்கப்பட்டு பின் கைது செய்யப்பட்டுள்ளார். குடாநாட்டின் பெரும்பான்மையான பாடசாலை மாணவர்கள் திவ்வியனின் விடுதலை வேண்டிப் பாடசாலைகளுக்குச் சமுகம் அளிக்கவில்லை. ஆனால் படையினரும் பொலீஸாரும் அதிபர், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்களை அச்சுறுத்தி பல்கலைக்கழக மாணவருக்கு ஆதரவு வழங்கக்கூடாதென வற்புறுத்தி மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

வன்முறைகளை விடுத்து ஜனநாயக ரீதியில் மாணவர்கள் மேற்கொண்டுவருகின்ற எதிர்ப்பு நடவடிக்கையை இராணுவத்தினரும் பொலீஸாரும் ஆயுத முனையில் அடக்குகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர். இது குடாநாட்டில் பெரும் வன்முறைகள் வெடிப்பதற்கான சைகைகளையே கோடி காட்டுகின்றது. சக மாணவனை இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் தவறவிட்டதாளாத துன்பத்தோடும் பொறுமையோடும் சாத்வீகமான முறையில் குரல்கொடுத்துவரும் மாணவர்களை அரச படைகள் சீண்டி வன்முறைக் களத்திற்கு வற்புறுத்தி அழைக்கின்றன.

இன்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் பாடசாலை மாணவர்கள் தொடர்ந்தும் எம் சக மாணவனின்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# தென்கிழக்கு பல்கலையிலும் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுதலை செய்யக் கோரியும், மூடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் திறகக் கோரியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன் பேரணியும் நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் ஐநூறு மாணவ, மாணவியர்கள கலந்துகொண்டனர்.

"அரசே, யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை உடன் விடுதலை செய்", "யாழ் பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திற", "மாணவர்களைக் கைது செய்வதன் மூலம், ஜனநாயகத்தின் குரல்வளையை நசுககாதே", "விடுதலை செய்யும் வரை விடாது போராடுவோம்", "அரசே மாணவர் மீதான அடக்குமுறையை நிறுத்து", "பல்கலைக்கழக சமூகத்தை நசுக்காதே", "சிறுபான்மை மக்கள் மீதான சகல ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம்", "மாணவர் சமூகத்தின் மீதான சகல ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம்" - என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்ததுடன் அதனைக் கோஷமாகவும் எழுப்பினர்.

இதேவேளை - தென்கிழக்குப் பலகலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுததுள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

"யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளரும் இறுதி வருட மாணவருமான திவ்வியன் கைது செய்யப்பட்டுள்ளதையும், அதைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரச பயங்கரவாதத்திற்கும் ஆயுதக் குழுக்களுக்குமிடையே சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவதற்காகத் தமிழர்கள் மத்தியில் எஞ்சியிருக்கும் ஒரே நிறுவனம் பல்கலைகழக சமூகமே!

எஞ்சியிருக்கும் இவ்வாறான ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதன் மூலம் தமிழ் சமூகத்தின் குரல்வளையை நசுக்க முனைவதை எம்மால் ஏற்க முடியாது.

திவ்வியனின் கைது மூலம் மாணவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் அபாயம் எழுந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் சமூகத்துக்கு எதிராக போதிய நியாயங்களின்றி எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்க்க வேண்டியது எமது தார்மீகக் கடமையாகும்.

திவ்வியனை விடுதலை செய்யக் கோருவதன் மூலமும், யாழ்பல்கலைகழகத்தைக் திறக்க வேண்டுவதன் மூலமும் எமது சக சிறுபான்மை இன மாணவர்களுடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்.

அவசியமற்ற பிரச்சினைகள் எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை. எனவே மாணவன் திவ்வியனை உடன் விடுதலை செய்யுமாறும், யாழ்.பல்கலைக்கழகத்தைத் திறக்குமாறும், அரசையும், சம்பந்தப்பட்ட தரப்பினரையும் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு எமது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றோம்" - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய ஆர்ப்பாட்டம் தமது இரண்டாம் பருவ கால பரீட்சைக்கு மத்தியில் முதற்கட்ட நடவடிக்கையெனவும் தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-14)

# கல்வியைத் தொடர அமைதியைப் பேணவும்!

## மாணவர்களுக்கு ஈ.பி.டி.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை13

மாணவர்கள் தமது கல்வியைத் தொடர அமைதி பேணுமாறும் வழமையான கடமையைத் தொடர குந்தகம் ஏற்படாமல் கண்ணியமாக நடந்து கொள்ளுமாறும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க. மணி பல்லவராஜன் மாணவர்களைக் கோரி உள்ளார் என ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்புத் தெரிவித்துள்ளது.

ஒரு சிலரின் பிழையான போக்குக்குத் துணை போவதன் மூலம் ஒட்டுமொத்தமாக மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் புரிந்து கொண்டு மாணவர் சமூகம் பாதிப்படையாமல் நடந்து கொள்ள முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டதைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி. அமைப்பினர் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்கால நலன்குறித்து இதனைத் திறக்கவேண்டும் எனக் கோரி வருகின்றனர். அத்தோடு கைது செய்யப்பட்ட மாணவனின் நீதி விசாரணையை உடன் ஆரம்பிக்குமாறும் வலியுறுத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான க.மணி பல்லவராஜன்(நிசாந்தன்) பல்கலைக் கழக நிர்வாகத்தோடும் பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகளோடும் மாணவர்களின் பெற்றோர்களோடும் படைத்தரப்பினரோடும் கலந்துரையாடல்களை நடத்தி வருவதோடு இது சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தெரியப்படுத்தி வருவதுடன் அமைச்சர் அவர்கள் இவ் விடயத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் - என்றார்.

### கடற்றொழிலாளர் சங்கமும் விடுவிக்குமாறு கோருகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது மிகவும் வேதனைக்குரியதும் அடிப்படை மனித உரிமை மீறலுமாகும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கை வருமாறு:-

திவ்வியனை உடன் விடுதலை செய்யவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப்படும்போது பல்கலைக்கழக உபவேந்தருடன் தொடர்பு கொண்டு அவரின் அனுமதியுடனேயே அது செய்யப்பட்டிருக்க வேண்டும். அவரின் அனுமதியின்றி யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்ட செயலானது யாழ். மாணவரின் கல்வியை மழுங்கடிக்கச் செய்யும் சதியா? இந்நடவடிக்கையை நாம் கண்டிக்கின்றோம். தொடர்ந்தும் அப்பாவிகளைக் கைது செய்து இவ்வகையாகத் துண்டிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.

சட்டப்படி கைது செய்யப்பட்டவர் இருவாரத்திற்குள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவேண்டும். தவறும் பட்சத்தில் எமது கடற்றொழில் சமூகம் ஒன்றுபட்டு நேரடியான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (உ-3)

### கல்லூரி தின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை13

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் கல்லூரி தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு நன்றித் திருப்பலியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)


## 46 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



இல.46, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

**MR.DAVID JEYARATNASINGAM HENSMAN**

தனது 46 ஆவது பிறந்த நாளை இன்று (13-07-2001) வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

HENSMAN ஐ வாழ்வில் சீரும் சிறப்பும் பெற்றும், உத்தியோகத்தில் மேலும் உயர் பதவிகள் பெற்றும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என மனமார வாழ்த்துகின்றோம்.

(90031) - நண்பர்கள்.



## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

18-08-2000 இல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பயிற்சியாளர் தரத்தில் நியமனம் பெற்றுத் தந்து 26-06-2001 இல் இருந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் பெற்றுத் தந்த

வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு

**கே. என். டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்,

வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவரும், சுன்னாகம் ஈ.பி.டி.பி அமைப்பாளருமாகிய,

**உயர்திரு. கே. கமலசேகரன்** (தோழர் பாபு) அவர்களுக்கும்

வலி.தெற்கு பிரதேச சபையின் உறுப்பினராகிய

**திரு. எஸ். சந்திரகாந்தன்** (தோழர் காந்தன்) அவர்களுக்கும்,

எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், இவர்களின் சேவை மேன்மேலும் தொடர எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

26-03-2001 இல் நிரந்தர நியமனம் பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலகம்
வலி.தெற்கு,
உடுவில்.

(90027)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

மணற்காடு கிராமத்தில் மீன் சந்தை, கடைத்தொகுதி, குறுக்குவீதி ஆகியன அமைப்பதற்கு நிதி ஒதுக்கிய மாண்புமிகு கௌரவ அமைச்சர்

**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

எமது பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர்

**திரு.ஐ.சிறீரங்கேஸ்வரன்** அவர்களையும்

மணற்காடு மக்கள் சார்பாக வாழ்த்துகிறோம்

கி.அ.வி.சங்கம், க.தொ.கூ.சங்கம்,
மணற்காடு.

(சி17406)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18-01-1918



உதிர்வு 24-06-2000

**அமரர் திரு.சிவகுரு நாகரத்தினம்**

(இளைப்பாறிய Railway Head Guard)

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

'சிவனடி வாசா',
சந்தை வீதி,உடுப்பிட்டி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

# வாஜ்பாய் - முஷாரப் பேச்சு ஆக்ராவில் நாளை ஆரம்பம்

## உலகெங்கிலிருந்தும் 700 பத்திரிகையாளர்கள் கூடுகின்றனர்



புதுடில்லி,ஜூலை13

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரும் ஜனாதிபதியுமான பெர்வேஷ் முஷாரப்புக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்கள் நாளை ஆரம்பமாகின்றன.

இந்த இரு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுக்களை உலகெங்கும் இருந்து பலரும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகளும் இந்தப் பேச்சுக்களுக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளன.

பேச்சுக்கள் இந்தியாவின் புகழ்பெற்ற நகரமான ஆக்ராவில் இடம்பெறும். அதன் விவரங்களைச் சேகரிக்கவென உலகெங்கும் இருந்து 700 பத்திரிகையாளர்கள் ஆக்ராவில் கூட உள்ளனர்.

பரம வைரிகளாகச் செயற்பட்டு வரும் இந்தியாவும் பாகிஸ்தானும் இந்தப் பேச்சுக்கள் மூலம் நெருங்கி வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை -



முஷாரப்புடனான பேச்சுக்களில் காஷ்மீர் தொடர்பான விவரங்கள் மட்டுமே இடம்பெறாது என்றும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதம், வாணிபம், கலாசாரம் தொடர்பான விடயங்களும் இந்தப் பேச்சுக்களின் போது ஆராயப்படும் என்றும் அவர் கூறினார்.

காஷ்மீர் தொடர்பாக ஜெனரல் முஷாரப் அண்மையில் தெரிவித்துள்ள கருத்துக்கள் அவர் திறந்த மனத்துடன் பேச்சுக்களில் பங்குபற்றுவதாக முன்னர் சொன்னதை கேள்விக்குரியதாக்குகின்றது என்றும் -

காஷ்மீர் குறித்துப் பேசப்படும் போது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் குறித்தும் பேசப்படும் என்றும் - வாஜ்பாய் மேலும் சொன்னார். (ம)



பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரும் ஜனாதிபதியுமான ஜெனரல் முஷாரப்பின் 80வயதான தாயாரான ஸரீன் முஷாரப்பைப் படத்தில் காணலாம். ரொய்டர் செய்தி நிறுவனத்துக்குப் பேட்டியளிப்பதற்காக இராணுவ வீரர் ஒருவர் அவரை அழைத்துச் செல்லும்போது எடுக்கப்பட்ட படம்.

வாஜ்பாய் - முஷாரப் சந்திப்பு இடம்பெறவுள்ள இந்தவேளையில், தனது மகன் நாட்டிலும் துணைக் கண்டத்திலும் விரைவில் சமாதானத்தை நிலைநாட்டுவான் எனத் தான் உறுதியாக நம்புவதாக அவர் அப்பேட்டியில் தெரிவித்தார்.

# கார்கில் ஆக்கிரமிப்புக்கு முஷாரப் மன்னிப்புக் கேட்க வேண்டும்

## சிவசேனைக் கட்சி ஆக்ராவில் ஆர்ப்பாட்டம்

1999இல் கார்கிலில் பாகிஸ்தானியப் படைகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கு ஜெனரல் பர்வேஷ் முஷாரப் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று சிவசேனைக் கட்சியினர் கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சிவசேனைத் தொண்டர்கள் நேற்றுமுன்தினம் ஆக்ரா நகரில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். முஷாரப்பின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. முஷாரப் ஆக்ரா நகருக்கு வரும் போது அவருக்கு கறுப்புக் கொடி காட்டுமாறும் சிவசேனையினர் ஆக்ரா நகர மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

### காணாமற்போனோர் கடலில் மீட்பு

சிறிய ரக விமானமொன்றில் ஜப்பானிலிருந்து அலாஸ்காவுக்கு சென்றபோது காணாமற்போயிருந்த அமெரிக்க விமானியும், 3 ஜப்பானியப் பயணிகளும், ரஷ்யாவுக்கு அண்மையில் பசுபிக் சமுத்திரக் கரையோரத்தில் மீட்கப்பட்டனர்.

உயிர்காக்கும் படகொன்றில் இருந்த இவர்கள் அவ்வழியே சென்ற கப்பல் ஒன்றால் மீட்கப்பட்டனர்.

காணாமற்போன விமானம் சுட்டு விழுத்தப்பட்டதாக முன்னர் கருதப்பட்டது குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலியத் தலைநகர் ஜெருஸலேத்துக்கு அருகில் உள்ள பலஸ்தீனர்களின் வீடுகளை இஸ்ரேலிய அதிகாரிகள் இடித்துத் தரைமட்டமாக்கி வருகின்றனர். அந்த நடவடிக்கையிலிருந்து தனது வீட்டைக் காப்பாற்றமுயன்ற பலஸ்தீனர் ஒருவர் இஸ்ரேலியப் படையினரால் இழுத்துக்கொண்டு செல்லப்படுவதையும் இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இஸ்ரேலிய இடதுசாரிகள் படையினருக்கு முன்பாக நிலத்தில் படுத்திருந்தவாறு மறியல் போர் நடத்துவதையும் படங்களில் காணலாம்.

மென்போக்கைக் கடைப்பிடிப்பதாக

# மத்திய அரசு மீது கருணாநிதி சாடல்

சென்னை,ஜூலை13

தமிழக அரசு மீது மத்திய அரசு மென்மையான போக்கையே கடைப்பிடிக்கின்றது என்று தான் கருதுவதாக தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி கருத்துத் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

சென்னை மாநகர சபையின் தலைவராகவும் அமைச்சராகவும் மேயர் ஸ்டாலினுடன் ஒத்துழைக்க மறுத்து வருகின்றனர். ஜனநாயகம் குறித்து வாய்கிழியப் பேசும் அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் கூட இதற்கு எதிர்ப்புக் கூறவில்லை. இந்த நிலையில் மாநிலத்தில் ஜனநாயகம் எவ்வாறு தழைக்கும்? என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ஸ்பெயின் தலைநகரில் கார் குண்டு வெடிப்பு!

## ஒருவர் பலி; 10 பேர் காயம்!

மட்றிட்,ஜூலை13

ஸ்பெயின் தலைநகரான மட்றிட்டில் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பொலீஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். பத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

ஸ்பெயின் நீதி அமைச்சின் கட்டடத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். குண்டுவெடிப்பால் நீதியமைச்சின் கட்டடமும் அருகில் இருந்த வேறுபல கட்டடங்களும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகின.

'பாஸ்க்' தனிநாடு கோரிப் போராடி வரும் ஈ.ரி.ஏ. தீவிரவாதிகளே இந்தக் குண்டுவெடிப்புக்குக் காரணம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒருமாத காலத்தில் மட்றிட்டில் இடம்பெறும் இரண்டாவது குண்டுத் தாக்குதல் இதுவாகும்.

# அரச கணனிகளில் கோளாறு சிலியில் பதிவுகள் அழிந்தன

## நாட்டில் குழப்பம்

சன்டியாகோ,ஜூலை13

சிலி நாட்டில் அரச கணனிகளில் ஏற்பட்ட தவறு காரணமாக அவற்றில் பதியப்பட்டிருந்த கடந்த ஒரு வருட காலத்துக்கான பதிவுகள் யாவும் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் நிர்வாகம் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கணனிகளில் தவறு ஏற்பட்டதாக அரசு அறிவித்துள்ள போதிலும் விரிப் பணத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் நோக்குடன் அல்லது நிர்வாகச் சீர்கேடுகளை மூடி மறைக்கும் நோக்குடன் கணனிகளில் இருந்த தகவல்கள் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால் அரசின் தகவல் தொழில்நுட்ப கணனி நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்தத் தவறு இடம்பெற்றது என்று அரச கணனி நிறுவனங்களின் இயக்குநரக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விபத்தால் கடந்த காலத் 12 மாத காலத்துக்கான நாட்டின் நிதி தொடர்பான விவரங்கள் அனைத்தும் அழிந்துபோயுள்ளன.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிலி நாட்டின் 51 அமைச்சுக்களும் நிதி நிறுவனங்களும் இனி வருங்காலங்களில் பழையபடி - கணனிகளுக்கு மேலதிகமாக - தமது நிதி தொடர்பான கணக்கு வழக்குகளை புத்தகங்களிலும் பதிவு செய்ய வேண்டும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

### கஷ்மீரில் இரு பெண்கள் மீது பாலியல் வல்லுறவு

காஷ்மீர் மாநிலத்தில் இந்தியப் படையினரால் இரு காஷ்மீரப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மாநிலத் தலைநகர் ஸ்ரீ நகரில் இருந்து 50 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சோப்பூர் என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தியப் படையினரின் இந்தக் கொடுஞ் செயலைக் கண்டித்து ஆயிரக்கணக்கான பெண்கள் ஸ்ரீ நகரில் திரண்டு இந்திய இராணுவத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ம)

சேர்பேர்னிக்காவில் சேர்பியர் நிகழ்த்திய

# நூற்றாண்டின் மிக மோசமான படுகொலைகள் குறித்த நினைவு

பெல்கிரேட்,ஜூலை13

கடந்த நூற்றாண்டின் மிக மோசமான இனப் படுகொலைகளில் ஒன்றான 'சேர்பேர்னிக்கா' படுகொலைச் சம்பவம் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நேற்று முன்தினம் சேர்பேர்னிக்காவில் நினைவு கூரப்பட்டது.

சேர்பிய - பொஸ்னிய எல்லைப் பகுதியில் உள்ள பொஸ்னிய நிலப்பரப்பினுள் உள்ள சேர்பேர்னிக்கா 1993இல் ஐநாவால் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. 1995இல் சேர்ஸ்னியா மீது ஆக்கிரமிப்பு நடத்திய சேர்பியர்கள் ஜூலை 15ஆம் திகதி சேர்பேர்னிக்காவை கைப்பற்றினர். அச்சமயம் பொஸ்னிய - சேர்பிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பொஸ்னியர்கள் அந்த நகரில் தஞ்சமடைந்திருந்தனர்.

நகரைக் கைப்பற்றிய சேர்பியப் படைகள் நகரில் இருந்தவர்களில் 12 க்கும் 77 க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களைப் பிரித்து எடுத்துவிட்டு ஏனைய பெண்கள் குழந்தைகள் அனைவரையும் அங்கிருந்து நாடு கடத்தினார்கள். அதன் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்ட ஆண்கள் அனைவரும் சேர்பியர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்துக்கும் மேல் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றபோதும் இதுவரை கொல்லப்பட்டவர்களின் முழுமையான விபரம் திரட்டப்படவில்லை.

இந்தப் படுகொலைகளில் இருந்து உயிர்தப்பியவர்கள் நேற்று முன்தினம் நகரில் கூடி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். நகரில் பதற்றம் காணப்பட்டதால் நேட்டோப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்தப் படுகொலைகளுக்குக் காரணமான யூகோஸ்லாவிய முன்னாள் அதிபர் ஸ்லொபோடான் மிலோசெவிக் தற்போது அனைத்துலக நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம)

# துருக்கியில் நிலநடுக்கம்

அங்காரா,ஜூலை13

துருக்கியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தால் 75 பேர் காயமடைந்தனர்.

தெற்கு மாகாணமான எரிசோறோமில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.4 ஆகப் பதிவானது. நிலநடுக்கம் தாக்கிய மையப் பகுதியில் ஒன்பது கிராமங்கள் முற்றாக அழிந்துள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்டபோது பயத்தால் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியே ஓடியதனாலேயே அதிகளவானோர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

1999ஆம் ஆண்டு ஓகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட நில நடுக்கங்களில் 20 ஆயிரம் துருக்கியர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ். தேர்தல் திணைக்களத்தில்

# சர்வஜன வாக்கெடுப்புக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பம்

வலி. வடக்கு, ஜூலை 13

எதிர்வரும் ஒகஸ்ட் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்புக்கான பூர்வாங்க ஆயத்த வேலைகள் யாழ். தேர்தல் அலுவலகத்தில் ஆரம்பமாகிவிட்டன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வாக்களிப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கடைசியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களாகச் செயற்பட்ட இடங்களிலும், மக்கள் புதிதாக மீளக்குடியமர்ந்த இடங்களிலும் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 13

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் காணாமற் போன 12 பேர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சாட்சிகளை அல்லது உறவினர்களை யாழ் பொலீஸ் நிலையத்துக்கு வருகை தருமாறுஅழைத்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ வல்லிபுரம் சிவலிங்கம் (கோவை இல. பி—125) ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

★ சின்னத்தம்பி சங்கரலிங்கம் கொட்டடி, யாழ்.

★ பரமலிங்கம் (மேற்குறிப்பிட்ட முவரும் சின்னத்தம்பி சிவலிங்கம் என்பவர் காணாமற் போனமை தொடர்பாக)

★ சரவணமுத்து சிறீதரன் (கோவை இல· பி—90)மிருசுவில்.

★ முத்தையா சின்னப்பிள்ளை (கோவை இல. பி—9/68) மந்துவில் மேற்கு. (இவர் சின்னப்பிள்ளை சுதர்சன் என்பவர் காணாமற் போனமை தொடர்பாக)

★ அம்பலம் விஜயகுமார் (கோவை இல. — பி 323) கோண்டாவில் கிழக்கு.

★ அன்ரன் நிக்சன் குமார் (கோவை இல.பி—397) சென் ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ செல்லன் குலேந்திரன் (கோவை இல. பி— 09/26) சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

★ கந்தசாமி அழகரத்தினம்(கோவை இல. பி—9/25) அம்மன் வீதி, சின்னக்கடை. யாழ்ப்பாணம்.

★ தேவதாஸ் அந்தோனி பசிலன் (கோவை இல. பி — 5/3 ) ஈச்சமோட்டை.

★ சுப்பிரமணியம் மூலவடிவேலன் (கோவை இல. பி—288) மாசார் பளை.

★ மருசீலன் தினேஷ் வல்ன்ரைம் (கோவை இல. பி—428) உரும்பிராய் தெற்கு

★ ராஜரட்ணம் சிறீதரன் (கோவை இல. பி — 469) கோப்பாய் தெற்கு.

★ சரவணை இராசமதி (கோவை இல. பி — 220) கரவைக் குறிச்சி மேற்கு, வேலணை.

(க-9)

# கப்பல் பயணிகளிடம் கடிதங்கள் பறிமுதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் பயணிகளால் எடுத்துச் செல்லப்பட்ட பெரும் தொகையான கடிதங்கள் தெல்லிப்பழையில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்துப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கப்பல் பயணிகள் எடுத்துச் செல்லும் பொருள்கள் தெல்லிப்பழையில் வைத்துப் பரிசோதிக்கப்படுகின்றன.

பயணிகள் பெரும்தொகையான கடிதங்களைத் தம்முடன் எடுத்துச் செல்வது அவதானிக்சப்பட்டிருப்பதாகவும்—

கடிதங்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கும் பொருள்களைச் சோதனை செய்வது காலதாமதத்தை ஏற்படுத்தும் என்பதால் அவற்றைப் படையினர் பொறுப்பேற்று தம்மிடம் ஒப்படைத்திருப்பதாகவும்—

'றான்' அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணிகளிடம் இருந்து பெறப்பட்ட 300க்கும் மேற்பட்ட கடிதங்கள் நேற்றுப் படையினரால் 'றான்' வெளிக்கள அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை—

கப்பல் பயணிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பல்வேறு பொருள்கள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு 'றான்' அலுவலகத்தில் வைத்து உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்களுக்கு உரியவர்கள் நாளை அங்கு தவறாது சமுகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு றான்' அலுவலகம் தெரிவித்துள்ளது.

(ஐ)

## ஆசிரியருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 13

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தரம் 8, 11 வகுப்புகளுக்கான தமிழ்மொழி மறுசீரமைப்புக் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை வலய அலுவலகத்தில் வழங்கப்படுமெனவும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிய ஆசிரியர்கள் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(க-117)

## மாணவனின் ஞாபகார்த்தமாக இரத்த தானம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி உயர்தர கணிதப் பிரிவு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் ஓராண்டு நினைவு தினத்தை ஒட்டி இன்று இரத்ததான நிகழ்வு நடைபெறவிருக்கிறது.

கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ். ஆஸ்பத்திரியில் இந்த ஞாபகார்த்த இரத்ததானம் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் இரத்த தானம் செய்ய விரும்பும் மாணவர்களையும் ஏனையோரையும் காலை உணவு உட்கொண்ட பின்னர் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு சமுகமளிக்குமாறு மாணவர் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர்.

(ஐ)

# சாத்வீகப் போராட்டத்துக்கு பல்கலை எழுதுநர்களும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் திவ்வியனை விடுவிக்கக் கோரி நடத்தப்படும் சாத்வீகப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் —

பல்கலைக்கழகத்தினைத் தொடர்ந்து மூடுவது எமது மக்களின் உயர் கல்வியைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதால் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனான திவ்வியனை விடுவிப்பதற்கும் இயல்பு நிலையினைக் கொண்டுவந்து பல்கலைக்கழகத்தினை மீண்டும் இயங்கவைப்பதற்கும், ஏற்ற நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம்— என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த திருக்குறள் வினாடி வினாப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடந்த 16 பாடசாலைகள் கலந்துகொண்ட தெரிவுப் போட்டியில் வெற்றிபெற்ற 8 பாடசாலைகளுக்கான அடுத்த கட்டப் போட்டிகள் இன்று இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ-11)

★ ★ ★

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு யாழ். மத்திய கல்லூரியில் பிரதி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெற்றுவந்த பயிற்சி வகுப்புக்கள் நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல் அடுத்த வாரம் முதல் இந்த வகுப்புக்கள் தொடர்ந்து இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

★ ★ ★

தென்மராட்சிகல்வி வலயத்தின் பாடசாலை மாணவர்களுக்கிடையே நாளை நடைபெறவிருந்த விவசாய விவினாவிடைப் போட்டியும், ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வர்த்தக வினாவிடைப் போட்டியும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## திவ்யப்பிரபந்த உரை

யாழ்ப்பாணம், ஜூலை 13

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள திவ்யப் பிரபந்தவுரையில் 'சமயமும் வாழ்வும்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவராஜ சர்மா உரையாற்றவுள்ளார்.

(உ-10)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, ஜூலை 13

நல்லூர் பிரதேசசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும்சனசமூக நிலையங்களுக்கு இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 9 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

கொக்குவில் சிவகுரு சனசமூக நிலையம் எதிர் கோண்டாவில் மக்கள் முன்னேற்றக் கழகம்.

மற்றுமோர் அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறும்

(க-86)

# கோப்பாய் ஆசிரியர்கலாசாலை மாணவரும் நேற்று பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். பல்கலைக்கழகம் காலவரையறை இன்றி மூடப்பட்டிருப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தும் - விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரி நேற்றுக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் அனைவரும் ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8. 30 மணிக்கு இருபாலை வீதியில் அமைந்துள்ள கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்றிலில் ஒன்றுகூடிய சுமார் 500 ஆசிரிய மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்துதமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஆசிரிய மாணவர் பிரதிநிதி ஒருவர் —

கல்விச் சமூகத்தின் செயற்பாடுகளை அவதானித்து எமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரலாம் என்று நாம் எமது ஆதரவை பல்கலைக்கழக சமூகத்துக்கு வெளிப்படுத்தும் முகமாக ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பை நடத்துகின்றோம்.

இன்று பல்கலைக்கழகத்தை மூடியவர்கள் நாளை எமது கலாசாலையையும் மூடுவதற்கு முற்படுவார்கள் இதனால் தான் எமது கல்விச் சொத்தாக விளங்கும் பல்கலைக்கழகத்தைஉடனடியாகத் திறக்க வேண்டும் எனக்கேட்டு நிற்கின்றோம்— என்று குறிப்பிட்டார்.

இதேவேளை —

பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரிய மாணவர்கள் பல் வேறு சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

அவற்றில் எழுதப்பட்டிருந்த சில வாசகங்கள் வருமாறு:—

★ அரசே! வதை முகாம்களை மூடி பல்கலைக்கழகத்தைஉடன் திற!......

★ வரலாற்றில் மூடப்படாத யாழ். பல்கலைக்கழகம் வஞ்சனையால் மூடப்பட்டது ஏன்?

★. அகிம்சைப் போராட்டம் அநீதி என்றால் நாம் என்ன ஆயுதமா ஏந்துவது?

★ உயர்கல்வி எங்கள் உயிர் அதற்கு ஏன் அடிக்கிறாய் சாவு மணி.

(க-6)

# கல்வியியல் கல்லூரி மாணவர் நேற்று பகிஷ்கரிப்பில் குதித்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதிவருட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை விடுதலை செய்ய வேண்டும் எனவும் —

பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறக்கவேண்டும் எனவும் —

கோரி யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தில் குதித்தனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் திவ்வியனை விடுதலை செய்து, பல்கலைக்கழகத்தைத் திறக்கும்வரை தமது வகுப்புகளைப் பகிஷ்கரிப்பது என்று முடிவெடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து கைகளில் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு மாணவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்பகுதியில் அமர்ந்திருந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்கள் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அவர்களால் எழுதி வைக்கப்பட்டிருந்த சுலோக அட்டைகளில் பின்வரும் வாசகங்கள் காணப்பட்டன:-

★ பேரினவாதமே கல்வியைச் சிதைக்காதே! மாணவரை வதைக்காதே!

★ யாழின் தந்தியை அறுப்பதுவோ? கல்வி இசைதனைத் தடுப்பதுவோ? அதனை நாம் ஏற்பதுவோ?

★ மாணவன் திவ்வியனை விடுதலை செய்!

★ யாழ். கல்விச் சமூகத்தின் கண்ணைக் குத்திக் குதறாதே!

(உ-6)

## தபாற் பொதிகள் நேற்று வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 13

காங்கேசன்துறைக்கு நேற்றுவியாழக்கிழமை வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 275 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 37 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-10)

## சமூகக்கல்வி போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட சமூகக் கல்விப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேலணை சைவப் பிரகாச வித்தியாலய மண்டபத்தில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எழுத்துப் பரீட்சை, ஆக்கக் கண்காட்சி என இரு பிரிவுகளாக இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

(உ-10)

உதயன்

## இடித்துரைக்க முன்வருக!

சுய அதிகாரம் கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தை அதன் துணை வேந்தரின் கருத்தைக் கூடக் கேட்காமல் உயர் கல்வி அமைச்சரும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும் இணைந்து மூடுவது என்று ஒருதலைப்பட்சமாக முடிவு செய்தது குறித்து யாழ்.புத்திஜீவிகள் மட்டத்தில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

யாழ்.பல்கலைக்கழக மாணவரின் பகிஷ்கரிப்புப் போராட்டம் எந்த விதமான வன்முறைகளும் அற்ற நிலையிலேயே இடம்பெற்றது. பல்கலைக்கழகச் சொத்துக்களுக்கு துளியளவும் சேதம் விளைவிக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தில் அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து இடம்பெற்றன. மருத்துவ பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் கூட இக்காலப் பகுதியில் நடைபெற்றிருக்கின்றன. துணைவேந்தர் எந்தவித இடையூறுகளும் இன்றி தனது கடமைகளை ஆற்றி வந்திருக்கின்றார். இந்த நிலையில் திடீரெனப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ள பல்கலைக்கழக ஊழியர் சங்கம், உயர் கல்வி அமைச்சர் எடுத்த நடவடிக்கை யாழ்.பல்கலைக்கழகத்தின் சுயாதிபத்தியத்திற்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கை எனவும் கண்டித்திருக்கின்றது.

இதற்கு ஒருபடி மேலேபோய் -

யாழ்.பல்கலைக்கழகத்தை மூட அரச உயர் பீடம் தன்னிச்சையாக எடுத்த முடிவு அரச வன்முறையின் உச்சக் கட்டம் என்று வவுனியா கல்வியியற் கல்லூரி மாணவர்கள் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

மாறி வருகின்ற, புதிய உலக ஒழுங்கில் ஏகாதிபத்தியவாதிகளும் அவற்றின் அடிவருடிகளும் தமக்கு எவை, எவை ஆபத்தானவையாக அமைகின்றனவோ அவை அனைத்தையும் வன்முறை என்று - பயங்கரவாதம் என்று - முத்திரை குத்தித் தமது உச்ச சக்தியைப் பிரயோகித்து, அவற்றை அடக்கி வருவது கண்கூடு என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது நோக்கற்பாலது.

பல்கலைக்கழகங்கள் இலங்கையைப் பொறுத்தவரை சுயாதிபத்தியம் - சுய அதிகாரம் - கொண்ட அமைப்புக்களாக இயங்கி வருகின்றன. 1995 இல் யாழ். குடாநாட்டில் பெரும் இடப்பெயர்வின் பின்னரும் கூட, தடையின்றி யாழ்.பல்கலைக்கழகம் இயங்கி வந்ததற்கு இதுவே அடிப்படை - முழுக் காரணம் ஆகும்.

வடக்கு - கிழக்குத் தமிழருக்கு அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமையை வழங்க மறுக்கும் அரசு, இலங்கை முழுவதுக்குமான பொதுத திட்டத்தின் கீழ், யாழ்.பல்கலைக்கழகத்துக்குக் கிடைக்க வேண்டிய சுயாதிபத்திய உரிமையைக் கூட அங்கீகரிக்க மறுக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கள நிலைமை என்னவென்பதை - இந்தப் போர் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் செவ்வனே யாழ்.பல்கலைக்கழகத்தை நிருவகித்து வரும் துணைவேந்தர் மற்றும் அவரது நிர்வாகத்திடம் - கேட்காமல் தன்னுடையபாட்டில் தேசிய பந்தோபஸ்து என்ற பெயரில் பல்கலைக்கழகத்தை மூடியது தவறான செயலாகும்; பிழையான முன்மாதிரியாகும்.

இது பிழையான - பொறுப்பற்ற - நடவடிக்கை என்பது அரச உயர் பீடத்திற்குச் சரியாகச் சுட்டிக்காட்டப்படாவிட்டால் எடுத்ததற்கெல்லாம் இந்த மருந்தைத்தான் உயர் கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் எதிர்காலத்தில் அடிக்கடி பின்பற்ற முயலும் என்பது திண்ணம்.

எனவே இதில் சம்பந்தப்பட்டோர் - பொறுப்பான பதவிகளில் இருப்போர் - தமது பதவி நிலைகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல் தமது சமூக பொறுப்பபையும் கடப்பாட்டையும் கூட கவனத்தில் கொண்டு, உண்மை நிலையை இடித்துரைத்து, அம்பலப்படுத்தி, மீண்டும் இத்தகைய தவறு நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவும், தற்போதைய தவறைத் திருந்தச் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இடம்பெயர்ந்து வடமராட்சியில் முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு பவுஸர் மூலம் குடிநீர் விநியோகம்

### சாவகச்சேரி நகரசபை ஏற்பாடு

வடமராட்சி,ஜுலை13

சாவகச்சேரிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் முகாம்களில் வாழும் மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்ய சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

குடிதண்ணீர் விநியோகத்துக்கென ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் பவுஸர் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம், பிளாஸ்ரிக் குழாயகள் ஆகியவற்றையும் வழங்க முன்வந்துள்ளது.

சபைக்குச் சொந்தமான டிராக்டருடன் குடிதண்ணீர் பவுஸர் இணைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

தென்மராட்சி இடம்பெயர்வை அடுத்து சபையினால் மக்களுக்கான சேவைகள் எதுவும் இடம்பெறாதிருப்பதைக் கருத்தில் கொண்டு குடிதண்ணீர் விநியோகச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச்சேவை மூலம் முகாம்களில் தங்கி வாழ்கின்ற இடம்பெயர்ந்த மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் இருந்து வரும் சிரமங்கள் நீங்கும் என எதிர்பார்க்கப்டுகிறது.

(க-173)

## ஊர்காவற்றுறை சின்னமடு மாதா உற்சவ ஏற்பாடு

ஊர்காவற்றுறை,ஜுலை13

பிரசித்திபெற்ற யாத்திரிகர் தலங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை சின்னமடு மாதா ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாவதை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலய உற்சவ காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள், போக்குவரத்து, யாத்திரிகர் தங்குவதற்கான ஏற்பாடுகள் தொண்டர் சேவை பற்றி அங்கு ஆராயப்பட்டது.

இக்கலந்துலரயாடலில் பிரதேச சபை அதிகாரிகள், போக்குவரத்துச் சபை அதிகாரிகள், சுகாதாரப்பிரிவு அதிகாரிகள், பங்குத் தந்தையர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலய உற்சவ இறுதி நாளான 4ஆம், 5ஆம் திகதிகளில் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து ஆலயத்திற்கு விசேட பஸ்சேவைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-16)

## நாட்டு நடப்பு

### போதை - IV

*சுதந்திர (க/ப)ள்ளு!*

வீஸ்கியை பிறண்டி தன்னை
வெளிநாட்டு குடிவகையை
இஷ்டம் போல் இங்கு வாங்க
எவரிடம் பணந்தானுண்டு?
கஷ்டம் தான் உன்பாடு தம்பி
கவலை நீ கொள்ளவேண்டாம்
இஷ்டமாய் சுதந்திரத்தை நாமும்
இங்கு உடன் பெற்றுவிட்டால்
உஷ்ணத்தைத் தணிக்க வல்ல
உயர் பானம் கள்ளில் செய்வோம்!

*- விகடகவி -*

## குடாநாட்டு மக்களே சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!!

# சுகபோகங்கள், பதவிகளுக்காக மௌனிகளாக இருக்கும்வரை கொடூரங்கள் தொடரவே செய்யும்

### அல்லாரை சம்பவத்திற்குப் பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜுலை13

அற்ப சொற்ப சுகபோகங்களுக்காக, சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் நாம் அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டு வாய்மூடி மௌனமாக இருக்கும்வரை, ஸ்ரீலங்காப படையினரின் பாலியல வல்லுறவுக் கொடூரங்கள் மற்றும் அடாவடித்தனங்கள் தொடரவே செய்யும்.

குடாநாட்டு மக்களே! தன்மானத்தோடு தலை நிமிர்ந்துவாழ நீங்கள் எழுச்சி கொண்டால் நாளையே விடிவு கிடைத்துவிடும். இது குறித்துச் சிந்தியுங்கள், செயற்படுங்கள்!

அல்லாரையில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுக் கொடுரத்தைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அல்லாரைப் பகுதியில் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை இரவு பெண்ணொருவர் படையினரால் பாலியல் வல்லுறவுக் கொடுமைக்கு இரையானது குறித்து கண்டனங்கள் ஒருபுறம் வந்துகொண்டிருந்தது. மறுபுறம் ஆயுதப் படையினரின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போன்றே எமது குரல்கள் பயனற்றுப்போகின்றன. பலாத்கார யுத்தம் மூலம் குடாநாட்டு மக்களைச் சிறைப்பிடித்தது போன்று கையகப்படுத்திய அப்பாவிப் பொதுமக்களை கொடுமையான வல்லுறவுகள் மூலம் எமது சீர்மையையும் சிறப்பையும் மாண்பையும் சீரழித்து வருகின்றனர் ஸ்ரீலங்காப் படையினர்.

தென்மராட்சி இன்று மக்கள் வாழ முடியாத சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது. மனித சஞ்சாரமற்ற மனித நேய அமைப்புக்களின் நடமாட்டம் இல்லாத சூனியப் பிரதேசத்தில் மக்களை வந்து குடியேறுமாறு வற்புறுத்தி அவ்வாறு அங்கு செல்லும் மக்களின்மீது தமது 'பசி'யைப் போக்க அரச படைகள் முயன்று வருகின்றமையை அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

தென்னிலங்கையில் இதே போன்று தமிழ்ப் பெண்கள்மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் பலாத்காரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பத்துத் தமிழ்க்கட்சிகள் ஒன்று திரண்டு மேற்கொண்ட ஹர்த்தாலின் எதிரொலி அடங்குவதற்குள் மீண்டும் அதேவகையான கொடூரம் நடந்தேறியிருக்கின்றது. ஸ்ரீலங்காவில் ஜனாதிபதியாக இருப்பவர் ஒரு பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற கொடூரங்களைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வது மிகவும் கவலைதருகின்ற விடயமாகும்.

எமது மக்களே நன்றாகச் சிந்திக்கவேண்டிய கட்டத்தில் உள்ளார்கள். நாம் அற்பமான வசதி வாய்ப்புக்களுக்காக எமது தேசியத்தை மறந்து, தனித்துவத்தை இழந்து கௌரவத்தைப் பறிகொடுத்து, சுதந்திரத்தைத் தொலைத்துவிட்டு மந்தைகள்போல் அடிமைகளாக வாழ்ந்து வருகின்றோம்.

சுகபோகங்களுக்காகவும், பதவி மோகங்களுக்காகவும் அரசிடமும் அதன் அடிவருடி கட்சியிடமும் முண்டுகொடுத்து நிற்கும்வரை இவ்வாறான கொடூரங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கும். குடாநாட்டு மக்கள் அனைவரும் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்பவர்களாயின் தமிழர்களின் அடிமை வாழ்வுக்கு நாளையே விடிவு கிடைத்துவிடும். இதுகுறித்து சிந்தியுங்கள், செயற்படுங்கள்! - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## நிவாரண விநியோகத்துக்கான சேவைக் கட்டணம் வழங்காததால் கூ.சங்கங்களுக்கு நிதி நெருக்கடி

அரியாலை,ஜுலை13

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண விநியோகத்திற்கான சேவைக் கட்டணங்களை யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நீண்டகாலமாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்காததினால் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருமதியான பல லட்சம் ரூபா, செயலக புனர்வாழ்வுப் பகுதியில் முடங்கிக் கிடப்பதாகச் சம்பந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

நிவாரண விநியோகத்திற்கான சேவைக்கட்டண நிதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புனர்வாழ்வுப் பகுதியினரால் நீண்டகாலமாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்விவகார அமைச்சர், யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு எந்தவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் சங்க வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

(ஜ-17)

## கூட்டுறவுச் சங்கங்களில் மா கையிருப்பில் இல்லை

அரியாலை,ஜுலை13

யாழ்.குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் போதியளவு கோதுமை மா கையிருப்பில் இல்லாததால் பாவனையாளர்களுக்கு மாவை வழங்குவதில் சங்கங்கள் பெரும் சிரமப்பட்டுவருவதாகக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.செயலக உணவுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் காங்கேசன்துறையில் உள்ள மா களஞ்சியத்தில் போதியளவு மா கையிருப்பில் இருந்தும் மாவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

காங்கேசன்துறை மா களஞ்சியப் பொறுப்பாளர் அண்மையில் தொடர்ந்து விடுமுறையில் சென்றதாலும் அதற்கான மாற்று ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையினாலுமே மா விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

குடாநாட்டில் உள்ள அனேக பநோ. கூட்டுறவுச் சங்கங்கள் கோதுமை மாவை ஒருவருக்குப் பத்து கிலோ என்ற அடிப்படையில் வழங்கி வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவிததன.

(ஜ-17)

### நாளை

ஆனி 30
சனிக்கிழமை
திதி: அட்டமி
முற்பகல் 9.17 வரை.
நட்சத்திரம் : அச்சுவினி
பின்இரவு 3.30 வரை.
சுபநேரம் : 3.00 - 4.30
ராகுகாலம் : 9.00 - 10.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நாவில் எலும்புகள் கிடையாது; ஆனால் அது எலும்புகளை நொறுக்க வல்லது.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



.... அது ஆபத்துக்குரிய வெடி பொருளாக இருக்கும் என நீங்கள் கருதினால் கைக்கு எட்டிய தூரத்தில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு அவ்விடத்தில் அடையாளம் வையுங்கள்.....
.... அடுத்து என்ன செய்வது?

எய்ட்ஸுக்கு வயது இருபது. அதைவிடக் கூட இருக்கலாம். ஐந்தாறு அல்லது பத்து வருடங்கள் அதிகம் இருக்கலாம். ஆனாலும் இந்தப் பெயருக்கு வயது இருபதுதான். 1981இல் தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.

புறொமிஸ் என்ற அமெரிக்கப் பெண்ணுக்கும் வயது இருபதுதான். அவள் பிறந்தபோதுதான் இந்த எய்ட்ஸ் என்கின்ற பெயரும் பிறந்திருக்க வேண்டும். அதற்காக அது அவளை அரவணைக்க வேண்டுமா? அதுதான் அவளது தலைவிதியா?

பாவம் பெயரே புறொமிஸ்தான். கறுப்பினத்தவள் என்றாலும் கண்டவரைச் சுண்டி இழுக்கும் பேரழகி அவள். அதற்காக கண்டபடி நடந்து வில்லங்கத்தை விலைக்கு வேண்டியவள் அல்லள். அச்சத்துடன் எதிர்காலத்தை எண்ணி நிற்கும் அவளது தோற்றமே பரிதாபம்தான். தனது காதலனிடம் அன்பு வைத்ததற்கு வந்து வாய்த்திருக்கும் பதில் பரிசுதான் இந்த எய்ட்ஸ். பாவி அவன் அதை எங்கே வாங்கிவந்து இவளிற்குத் தந்தானோ?

இப்படித்தான் இளம் பெண்கள் மில்லியன் கணக்கில் பாழாய்ப் போகிறார்கள். அப்பாவித் தனமாக நடந்து நோய்ய வாங்கிவிடுகிறார்கள். எனவே சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது. சிந்தனை மட்டும் போதாது. அது செயல்வடிவம் பெற்றாக வேண்டும்.

எல்லாம் ஆண்களையே குற்றம் சொல்லிவிட முடியாது. அவர்களும்தான் இடம் தெரியாமல் போய் இந்த ஆபத்தில் மாட்டிவிடுகிறார்கள். திணறும்போதுதான் துரோகத்தனங்கள் தெரிகின்றன. வாங்கிக்கொண்ட எய்ட்ஸ் உடனடியாகத் தனது குணங்குறிகளைக் காட்டாது உள்ளிருந்து அறுக்கிறதே. அதுதான் அடுத்த கொடுமை.

எச்சரிக்கையாக இருங்கள், காப்புறைகளைப் பாவியுங்கள், இரத்தம் ஏற்றுதலைத் தவிருங்கள், பாவித்த ஊசிகளைத் தவிருங்கள் என்றெல்லாம் கூறப்படும் பலவாறான ஆலோசனைகள் புளித்துப்போன உபதேசங்கள் என்றாலும் அவற்றை மீறி நடக்கவும் இயலாதுதான்.


புறொமிஸ் பரிதாபம்

நாளையோ என்று இருபது ஆண்டுகளாகப் பாச்சா காட்டும் அந்த மருந்து கண்டுபிடிக்கப்படுவது எப்போதோ?

அடுத்த இருபது ஆண்டுகளில் மருந்து கண்டுபிடிக்கப்படாத நிலைமையில் இது காவு கொள்ளும் மக்கள் தொகை நூறு மில்லியனைத் தாண்டிவிடும். இதேபோக்கில் நோய் பரவினால் 2020இல் ஆண்டொன்றுக்கு 15 மில்லியன் மக்களை இது காவுகொள்ளும் என அஞ்சப்படுகின்றது. ஆபிரிக்காவின் சனத்தொகை அப்போது வெகுவாகக் குறைந்துவிடும்.

இவற்றைப் பற்றியெல்லாம் யார் கவலைப்படுகிறார்கள்? உலகெங்கும் விபசாரம் பெருகி வருகின்றது. காரணம் திருமணம் செய்து குடும்பமாக வாழுவது சுமை எனக் கருதும் கலாசாரம் தலைதூக்கி வருகின்றது. கருத்துக் கணிப்புக்களின்படி மேற்கு நாடுகளில் ஐம்பது வீதமான பெண்கள் தற்போது திருமணத்தை விரும்பவில்லை. திருமணம் முன்னேற்றத்துக்குத் தடை என்ற கருத்து பரவி வருவது ஆபத்தானது. திருமணமானவர்களிலும் அரைவாசிப்பேர் விவாகரத்துப் பெறுகிறார்கள். மறுமணம் காத்திருக்கின்றது. இணையத் தொடர்புகள் வக்கிரமான பாலியல் உறவுகளை மிக மோசமாக வளர்த்து வருகின்றன.

# எய்ட்ஸுக்கு வயது இருபது!

மனிதனைப்போய் உறவைத் தவிர்த்துக்கொள் என்று கேட்பது நியாயமாகாது. பிறக்கும்போதே எய்ட்ஸ் இல்லாமல் பிறக்க வேண்டும். அதுவே பெரும் பாக்கியம் என எண்ணத் தோன்றும் நிலைமை பல நாடுகளில் நிலவுகின்றது. வளரும்போது எவருடனும் எச்சில் கூடக் கலக்காமல் எச்சரிக்கையாக வாழப் பழகவேண்டும். தன்னினத்தோடோ எதிர்ப்பாலாரோடோ எந்தவொரு பாலியல் நடவடிக்கைகளிலும் இறங்கக்கூடாது. இரத்தம் ஏற்றுதல், ஊசி ஏற்றுதல் என்பனவெல்லாம் வாழ்க்கையில் சந்திக்கவே கூடாது. இவ்வாறு வளருகின்றவர் தன்னைப் போலவே பிறப்பில் இருந்தே சுத்தமாக இருக்கும் ஒரு துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். இருவரும் ஒருவருக்கு ஒருவர் விசுவாசமாக ஆயுள் பூராவும் வாழவேண்டும்.


எய்ட்ஸ் வைரஸ்

இதுவே எய்ட்ஸைத் தவிர்க்க மிகச் சிறந்த வழி. இதைத் தவிர்த்து எப்படியும் வாழலாம், காப்புறைகள் காப்பாற்றும் என்றெல்லாம் கருதமுடியாது. அங்கே பல சிக்கல்கள் எழத்தான் செய்கின்றன. "மண் தின்பதை..." போன்ற வாதங்கள் அடிபட்டுப் போயாக வேண்டும்.

போதைக் கும்பல்களிடம் அகப்பட்டுவிடக் கூடாது. துணையைத் தெரிவு செய்யும்போது சாதகப் பொருத்தம் அவசியமோ இல்லையோ குருதிப் பரிசோதனை அவசியமாகின்றது. தவிர்த்தால் சந்ததி கூடத் தப்ப வழியிருக்காது. ஆசையாகப் பெற்றெடுத்த பிள்ளைக்கு எய்ட்ஸ் என்றால் தாங்குமா மனது?

இன்றும் இது ஒரு தொலைதூரச் சங்கதி என நினைப்பது மடைமை. எமக்குள் ஆழம் தெரியாமல் இது ஊடுருவி விட்டதுதான் உண்மை. குட்டு வெளிப்படும்போது கூண்டோடு கைலாயம்தான். எமது பண்பாடு இதனை ஒட்டவிடாது கட்டிக்காக்கும் என்று இன்றைக்கும் நம்பியிருக்கமுடியாது. சரியான புள்ளிவிவரங்களை இப்பிரதேசங்களில் பெறல் கடினமே.

அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் இப்படித்தான் ஆரம்பத்தில் இரண்டொன்று என நோய் கண்டிருக்கின்றது. கடந்த இருபது வருடங்களில் உலகெங்கும் 22 மில்லியன் அதாவது 220 இலட்சம் மக்களை இது பலிகொண்டுவிட்டது.

இருபது வருட ஆராய்ச்சியில் இன்னமும் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாத நோய் என்றால் அது எய்ட்ஸ்தான். நோய் கண்டவரின் ஆபத்தை தற்காலிகமாகத் தணிக்கப் பயன்படும் மருந்துகளோ எய்ட்ஸ் வைரஸை விடத் தாக்கமானவை போலிருக்கின்றன. கடுமையான மருந்துகளை அதிகம் பாவித்து நோயாளியைச் சற்று சமாளிக்க முடிகிறது.

தடுப்பு மருந்தொன்றைக் கண்டுபிடித்து உலகெங்கும் மக்களுக்கு அம்மைத் தடுப்பு, போலியோ சொட்டு மருந்து போல அதனையும் ஏற்றிவிட்டால் இந்தத் தொல்லை இல்லையே என்கின்ற துடிப்பு பல ஆராய்ச்சியாளர்களிடம் இருக்கின்றது. இன்றோ

உலகம் முழுவதும் சுமார் 36 மில்லியன் மக்கள் தற்போது HIV வைரஸைக் கொண்டிருக்கிறார்கள். இத்தொகை ஆஸ்திரேலியாவின் சனத்தொகையைவிட அதிகம் என்கின்றது நியூஸ்வீக். ஓப்பீட்டளவில் முன்னேறிவிட்ட அமெரிக்க நாடுகளில் இதன் பரம்பல் குறைவாகவே இருக்கின்றதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேற்படி 36 மில்லியனில் ஒரு மில்லியனுக்குக் குறைவானவர்களே அமெரிக்காவில் உள்ளனர். HIVயை கொண்டிருக்கும் மக்களில் பலருக்கு அது தம்மிடத்தில் இருப்பது தெரியாது என்பது பாரிய பின்னடைவு ஆகின்றது.

ஆபிரிக்க நாடுகளில் பாடசாலைகளையும் குழந்தைகள் பராமரிப்பையும் சமாளிக்க இயலாத அளவிற்கு ஆசிரியர் மற்றும் தாதிகள் பற்றாக்குறை எழுந்துள்ளது. ஏழு ஆபிரிக்க நாடுகளில் 15 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்களில் ஐந்து பேருக்கு ஒருவர் வைரஸைக் கொண்டுள்ளனர். பொட்ஸ்வானா, ஸம்பியா போன்ற நாடுகளில் மூன்றுபேரில் ஒருவருக்கு HIV காணப்படுகின்றது. இறப்பு வேகத்தில் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்க இயலாமல் அந்த நாடுகள் திணறுகின்றன. எனவே வெளிநாட்டவருக்கான வேலை வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை ஏற்கலாமா?

பெற்றோர் மடிவதனால் 40 மில்லியன் அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் ஆபிரிக்காவில் எழுகின்றது. இவர்களைப் பராமரிக்க ஆகக் குறைந்தது ஒரு மில்லியன் ஆரோக்கியமான பராமரிப்பாளர்கள் தேவைப்படுகிறார்கள். தவிர எத்தனையோ பில்லியன் டொலர் உதவிகளும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் சேவையும் அங்கு அவசியமாகின்றது. இப்படியோர் நிலைமை ஏனைய நாடுகளுக்கும் பரவிவிட்டால் உலகின் கதி என்னாவது?

"Y2K... Y2K..."என்று கத்தினார்களே, கடைசியில் எதுவும் நடக்கவில்லை. அதுபோல இதையும் வெறும் கத்தல் என்று கழித்துவிட இயலாது. HIV கொண்டுள்ளவர்களை என்ன செய்யலாம் என்று பலவாறான ஆலோசனைகள் தெரிவிக்கப்படுகின்றன. சுட்டுத் தள்ளினால் என்ன என நினைப்பவர்களும் எம்மத்தியில் இருக்கிறார்கள். அவர்களைப் பச்சை குத்தி அடையாளம் காட்டினால் என்ன என பிரபல அமெரிக்க வைத்தியர் ஒருவர் உட்பட பலரும் ஆலோசனை கூறிவருகிறார்கள். இருட்டில் பச்சை எல்லாம் யார் பார்க்கப் போகிறார்கள்?

கனடா தனது நாட்டுக்குள் வருபவர்கள் எல்லோரும் HIV பரிசோதனைக்கு உட்பட வேண்டும் எனத் தெரிவித்து இருக்கின்றது. அதுசரி நாட்டின் உள்ளே வைரஸுடன் இருப்பவர்களை அது என்ன செய்யப் போகின்றதோ? வெளியேற்றி விடலாமா?

இள மட்டங்களிடையே எப்படிப் போதித்தாலும் பாதுகாப்பான பாலுறவு பற்றிய போதனைகள் எடுபடவில்லை என்று சமூக சேவையாளர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். எய்ட்ஸாவது மண்ணாங்கட்டியாவது என்கின்ற அவர்களின் போக்கில் நோய் முற்றிய பின்பு ஆதல் ஞானம் பிறக்குமா?

அமெரிக்க இளைஞர் மையங்களில் கூடும் இளசுகளிடையே இரு பிரிவுகள் இருப்பதாக தெரியவருகின்றது. இது கொஞ்சம் வரவேற்கத்தக்கது. இரத்தப் பரிசோதனை செய்துகொண்டு இவர்கள் அணி பிரிகிறார்களாம். HIVயை கொண்டிராதோர் அணி ஒரு புறம் கொண்டிருப்போர் அணி மறுபுறம் என்கின்ற நிலைமை சற்று முன்னேற்றம்தான்.

நெற்றியில் பச்சை குத்தி பிரதேசங்களைப் பிரித்து நோயாளிகளை வாழச் செய்தால் என்ன, அது மனித உரிமை மீறல் ஆகிவிடுமா? இவர்களை உள்ளே விட்டால் அடுத்தவர்களின் வாழும் உரிமையை கெடுக்கிறார்களே என்றெல்லாம் கருத்துக்கள் தலைதூக்கத் தொடங்குகின்றன.

எய்ட்ஸ் பலி கொள்ளும் ஆ[...]
காவைப் பொறுத்தளவில் அ[...]
ஐந்து மடங்கு அதிகம். கா[...]
மடங்கு சுத்தமானவர்கள் எல்ல[...]
நோய்ப் பரம்பல் விகிதம் ஆ[...]
கவே தென்படுகின்றது. இரத்த[...]
வும் ஆண்களைவிடப் பெண[...]
HIV பரம்பலில் பெண்களின் [...]
அதனைச் சற்று எதிர்த்துத் த[...]
அதிகம்தான். நைரோபியின் [...]
கொள்ளப்பட்ட ஆய்வொன்று [...]
அவர்களின் இரத்தத்தில் [...]
செய்யப்பட்டுள்ளது.

எனினும் இவர்களின் இரத்தில் [...]
ஒரு தடுப்பு மருந்தாகப் பயபடுத்[...]
நீண்டகாலமாக கண்டவர்களும் [...]
ஈடுபடும் இவர்கள் தாம் பாதிக்[...]
நோயைக் கொடுத்தே வருகிர்கள்[...]


இந்திய டிறக் சாதிக[...]

அத்துடன் தடுப்பு மருந்து[...]
பயன்படுத்தப்படல் வேண்டும். [...]
எக்காலத்திலும் மேற்கொள்ள [...]
ளிகளை உருவாக்கிவிடும் [...]
கண்டுபிடிக்கப்பட்ட சில தடுப் ம[...]
தடுப்பதாக இல்லை. மிகவும் [...]
பாதுகாப்பானவை என்றாலும் [...]
சக்தி கிடைப்பதில்லை.


எய்ட்ஸிற்கான தடுப்பு மருந்[...]
அயராது பல ஆண்டுகள் தீவ[...]
Berkley என்ற நிபுணர். அ[...]

**மு.சிவநேச[...]**

நடைபெறுகின்றன. கணனி [...]
சொவ்ட்' நிறுவன அதிபர் பில் கே[...]
தந்திருக்கிறார். மேலும் 100 மில்லிய[...]
ஒப்புதல் தந்திருக்கிறார்.

நைரோபியில் ஒரு நவீன [...]
வேகமாகக் கிளைபரப்பி வள[...]
பிடுங்கியது இலாபம்' என்று [...]
வரும் ஒரு பிரிவினர் சேரிப் [...]
மேற்பட்ட தேவாலயங்களை [...]
சந்தர்ப்பவாதத்தை இட்டு நைரோபி[...]
மதகுரு Alex Zanutelli ஆழ்ந்த கவ[...]

சேரிப்புறங்களில் எய்ட்ஸ் நன்றா[...]


எய்ட்ஸ் வைரஸ்

கின்றது. மக்களின் அறிவு மட்டமே[...]
கின்றது. சகாய விலையில் விநி[...]
கூட அவர்களால் வாங்க இயலு[...]
பாவிக்கக் கூடாது என்ற கொள்கை [...]
இணைவது அவர்களுக்கு வசதியா[...]
எய்ட்ஸ் மாறிவிடுவதாக போதிக்[...]
மனத்திருப்தியைத் தருகிறது. இரத்[...]
செய்து நோய் மாறிவிட்டதை உ[...]
பதில்லை.

மில்லியன் கணக்கில் மக்கள் [...]
படுவது பற்றி உலக சுகாதார நி[...]
அமைப்புக்களும் விசனம் தெரிவித்[...]

ம் ஆண்களின் எண்ணிக்கையோ அமெரிக்
அதிகம்தான். அதுவும் பெண்களைவிட
காரணம் என்னவோ? பெண்கள் ஐந்து
என்றல்ல கருத்து. பொதுவாகவே சில
ஆண்களைவிட பெண்களிடம் குறைவா
ரத்த அழுத்தம், இதய நோய்கள் என்பன
பெண்களிடம் குறைவாகவே உள்ளன.
ரின் பங்களிப்பு கணிசமாக இருந்தாலும்
த் தாக்குப்பிடிக்கும் வலிமை அவர்களிடம்
ரின் விபச்சார வட்டாரங்களிடையே மேற்
ன்று இதனை உறுதி செய்திருக்கின்றது.
வைரசு எதிர்ப்புச் சக்தி இருப்பது உறுதி

இரத்தத்தில் இருக்கும் எதிர்ப்புச் சக்தியை
பயன்படுத்த இயலவில்லை. காரணம்
களுடனும் விபச்சார நடவடிக்கைகளில்
ாதிக்கப்படாதபோதும் அடுத்தவர்களுக்கு
ருகிறார்கள்.



க் சாரதிகளுக்கு ஆலோசனை


நந்துக்காக செயற்திறன் குறைந்த HIV
டும். எனவே இவ்வாய்வுகளை மனிதனில்
ள்ள இயலாது. அது மேலும் பல நோயா
டும் என்கின்ற அச்சம் நியாயமானதே.
தடுப்பு மருந்துகள் நோய்த் தொற்றைத்
வும் வீரியம் குறைந்த தடுப்பு மருந்துகள்
லும் அவற்றினால் வைரஸை எதிர்க்கும்

மருந்தொன்றைக் கண்டுபிடிக்கும் பணியில்
தீவிரமாக உழைத்து வருகிறார் Seth
அவரது தற்போதைய 500 மில்லியன்

...நசன்

டொலர் திட்டத்திற்கு
தேவையான நிதியை
திரட்டும் முயற்சிகள்
னி உலகில் பெயர்போன 'மைக்ரோ
பில் கேட்ஸ் 25 மில்லியன் டொலர்களைத்
) மில்லியன் டொலர்களை அவர் வழங்க

ீன எய்ட்ஸ் சிகிச்சை நிலையமொன்று
வளர்ந்து வருகின்றது. 'எரிகின்ற வீட்டில்
ன்று தீவிர மதமாற்றங்களை ஏற்படுத்தி
ரிப் பகுதிகளுக்குள் ஊடுருவி 50ற்கும்
ளை ஸ்தாபித்து விட்டார்கள். இந்தச்
நைரோபியின் உரோமன் கத்தோலிக்க
இந்த கவலை தெரிவித்து இருக்கிறார்.
ஸ் நன்றாகப் புகுந்து விளையாடி இருக்



வைரஸ் தாக்குதல்

மட்டமோ மிகவும் கீழ்நிலையில் இருக்
் விநியோகிக்கப்படும் மருந்துகளைக்
இயலுவதில்லை. எனவே மருந்தே
காள்கை கொண்ட ஒரு தேவாலயத்தில்
வசதியாகப் படுகிறது. செபத்தின் மூலம்
ாதிக்கப்படுவது அவர்களுக்கு ஒரு
ு. இரத்தப் பரிசோதனை கூட அவர்கள்
தை உறுதிப்படுத்த அவகாசம் கிடைப்

க்கள் இத்தகைய போக்குகளில் எடு
தார நிறுவனங்கள் பலவும் தொண்டர்
தெரிவித்து வருகின்றன. காய்ச்சலுக்கே

மருந்து எடுக்காது ஆளை மடிய விடுகிறவர்களுக்கு எய்ட்ஸ் என்றால் அந்த மருந்தே இல்லாத நோய்க்கு செபம் மூலம் தீர்வு காண நினைப்பது ஒன்றும் சிக்கல் இல்லையே.

. அங்கெல்லாம் எய்ட்ஸ் கண்டவர்கள் மடிகிறார்கள் இல்லை. அவர்கள் பரிசுத்த ஆவியினால் மோட்சம் பெறுகிறார்கள் என்றே கருதப்படுகிறது.

இந்தியாவில் தற்போது 4 மில்லியன் எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நூறு இந்தியர்களில் ஒருவரிடம் HIV இருக்கிறது. 2004 இல் இத்தொகை இருபது மில்லியனாக அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. இந்திய நிலைமை தற்போதும் கட்டுப்படுத்தத்தக்க நிலையில்தான் உள்ளது. அதனைக் கட்டு மீறாமல் பார்த்துக்கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசரமாக அவசியமாகின்றன.

அங்கு சுமார் ஐந்து மில்லியன் விபச்சாரிகள் தமது பிழைப்பில் தீவிரமாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் ஓடித்திரியும் டிறக் சாரதிகள் இவர்களது வழமையான வாடிக்கையாளர்கள். இரண்டு தரப்பாரையும் கட்டுப்படுத்துவது கடினமான நிலையில் எய்ட்ஸ் ஆபத்து நாடு முழுவதும் பரவிவிடக்கூடும். போதைக்காக ஊசிகளைப் பரிமாறும் இளைஞர்களும் இந்த ஆபத்தில் மாட்டித் தவிக்கிறார்கள்.

இலங்கையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். இனியும் இது ஒரு வெளிநாட்டுச் சமாச்சாரமாக அமையாமல் உள்நாட்டிலேயே எய்ட்ஸைப் பெற்றுவிடல் முடியும் என்கின்ற அச்சம் எழல் வேண்டும்.

வெளிநாடுகளுக்குப் படையெடுக்கும் பெருமளவு இலங்கைப் பெண்களின் இலக்கு திருமணம் ஆகின்றது. அனேகமாக அவர்கள் ஓரளவு கல்வித்தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களாகவும் இருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர், வெளிநாடு ஒன்றிற்குப் பறந்துவிட்ட ஒருவரிடம் அவர்கள் போய்ச் சேரும்போது எய்ட்ஸ் தொடர்பான குருதிப் பரிசோதனையை முதலில் செய்து கொள்ள முன்வருமாறு கேட்கும் துணிவு இவர்களிடம் இருக்குமா?


எய்டஸ் பற்றி ஆங்கிலப் பத்திரிகைகளில் வரும் வாசகர் மடல்கள்தான் இலங்கையில் சூடாக இருக்கின்றன. பண்பாடு, கலாசார நோக்கர் ஒருவர் பத்திரிகைகளில் வரும் காப்புறை விளம்பரங்களைச் சாடி எழுதியிருக்கிறார். பௌத்ததர்மம் தழைத்தோங்கும் இலங்கை போன்ற புனிதமான ஒரு நாட்டில் இத்தகைய விளம்பரங்கள் அவசியம்தானா? எய்ட்ஸ் பரம்ப இது என்ன கேவலமான நாடா என்றெல்லாம் அவர் கேள்வி எழுப்புகிறார்.

சில பிரபல்யமான பெண் பிரமுகர்கள் கௌரவமாக காப்புறை விநியோக முகாம்களில் கலந்து கொண்டமையை அவர் ஏளனத்துடன் குறிப்பிட்டிருந்தார். ஏன் வைத்தியர்கள் எய்ட்ஸ் நோயாளிகள் மீது அனுதாபப்படல் வேண்டும் என்ற அவரது கேள்வி மனிதாபிமானத்தைக் கேள்விக்குறி ஆக்கியிருக்கின்றது. சில சட்டத்தரணிகளையும் சாட அவர் தவறவில்லை.

எவராவது தான் பாலியல் உறவில் எய்ட்ஸைப் பெற்றதாக ஒப்புக் கொள்கிறார்களா எனக் கேள்வி எழுப்பும் இன்னொருவர், இரத்தம் ஏற்றியது நல்ல சாட்டு என்கிறார். எனவே எய்ட்ஸ் கண்டவர்களைத் திரும்பியும் பார்க்கக் கூடாது என்றுவிட்டார்.

அடுத்து ஒரு நாட்டு வைத்தியர் அதே பத்திரிகையின் 'சிறு விளம்பரப் பகுதியில் கொடுத்த விளம்பரம் ஒன்று சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றது. எய்ட்ஸைக் குணப்படுத்த தன்னிடம் வரும்படி அவர் விடுத்த கோரிக்கை கிண்டலுக்குள்ளாகி இருக்கிறது. ஒரு நூறு ரூபாய் செலவில் கொடுத்த விளம்பரம் பிராணனை வாங்குகின்றது.

அந்த வைத்தியர் இலங்கைக்கு ஒரு வரப்பிரசாதம். அமெரிக்காவில் மடியக் காத்திருக்கும் பல மில்லியன் மக்கள் இனி கவலையை விடுத்து இலங்கைக்குப் படையெடுக்கலாமே. வீணாக ஏன் இனியும் ஆராய்ச்சியாளர்கள் மண்டையைக் குடைந்து கொண்டிருக்கிறார்கள்? இலங்கையின் மதிப்பு இனி உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கப் போகின்றது. என்றெல்லாம் பலவாறான விமர்சனங்கள் பத்திரிகைப் பக்கங்களை நிறைக்கின்றன.



தேவாலயத்தில் எய்ட்ஸ் சிகிச்சை

உடனடியாக சுகாதார அமைச்சு அவர் வீட்டிற்குப் படையெடுத்தாக வேண்டும். நிலைமையை உறுதிப்படுத்தாதவிடத்து போலி விளம்பரம் கொடுத்த குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்தாக வேண்டும் என்றெல்லாம் சூடு பறக்கிறது விவகாரம். எல்லாம் வெறும் எழுத்துப் போர்தான்.

பாவம் எய்ட்ஸ் அது தனது இருபதாவது ஆண்டுவிழாவை இலங்கையிலும் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. ★

# அர்ஜுனனுக்காக செருப்பு ஏந்திய கிருஷ்ணன்!

பாரதப்போர் நடந்து கொண்டிருந்தது. பீஷ்மரைத் தனது படைத் தளபதியாக நியமித்திருந்தான் துரியோதனன். கௌரவப் படையில் சிலர் அதைப் பற்றித் தங்கள் சந்தேகங்களைச் சொல்ல ஆரம்பித்தார்கள். "பாண்டவர்கள் படையில் மிகமுக்கியமானவன் அர்ஜுனன். அவனை வீழ்ததினால்தான் போரில் ஜெயிக்க முடியும். ஆனால் பீஷ்மர் அப்படிச் செய்வாரா? அவரது அருமைப் பேரனாயிற்றே அர்ஜுனன்? அவனைக் கொல்ல அவருக்கு மனம் வருமா?" என்று பீஷமரின் மன உறுதியைப் பற்றி முறைகேடாகப் பேச ஆரம்பித்தார்கள்.

இது பீஷ்மரின் காதுக்குப் போயிற்று. அவருடைய மனம் புண்பட்டது. "யார் அப்படிச் சொன்னது? என்னுடைய கடமையை நான் தவறாமல் செய்வேன். அர்ஜுனன் என்னிடம் போரிட வந்தால் அவனை எதிர்த்துப் போரிடத் தயங்கமாட்டேன்!" என்று பலரிடமும் கூறினார்.

ஞானக்கதிர்

ஆனால் அர்ஜுனனை கொன்று வீழ்த்துவேன் என்று மட்டும் உறுதியாகச் சொல்லவில்லை. இதைக் கண்ணன் அறிந்து கொண்டார். பீஷ்மரின் மனம் அந்த அளவிற்குக் கடுமையாகிவிடவில்லை என்பதைப் புரிந்து கொண்டார். இதை அர்ஜுனனுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஒரு தந்திரம் செய்தார்!


அந்த நாளில் போரிடும் களத்தில் பெண்கள் யாரும் வரக்கூடாது. அதேபோல இரவுவேளையில் யாரும போர்களத்தில் எங்கும் போகலாம் எதிரிகளைக்கூட யாரும் தாக்கமாட்டார்கள். பொழுது சாய்ந்த பின் ஆயுதம தாங்கிச் சண்டையிடக்கூடாது என்பது அப்போது இரு தரப்பினராலும் முக்கியமான கொள்கையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. கண்ணபிரான் திரௌபதியை வரும்படி சொல்லி அனுப்பினார். திரௌபதி வந்ததும் வா! பீஷ்மரைப் போய்ப்பார்த்துவிட்டு வருவோம். என்று கூறினார். திரௌபதி தயங்கினாள். "அவரைப் போய் நான் எதற்காகப் பார்ப்பது? கௌரவர்கள் என்னுடைய மானத்தை வாங்கச் சூழ்ச்சி செய்தபோது அவர் தடுத்துச் சொல்லக்கூட இல்லையே? அவரிடம் எனக்கென்ன வேலை?" என்று கேட்டாள்.

"முக்கியமான வேலை இருக்கிறது! உன் கணவன் அர்ஜுனனின் உயிரை நீ காப்பாற்ற வேண்டுமானால் இதைச் செய்தாக வேண்டும். நான் சொல்கிறபடி, என்னுடன் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் முக்காடிட்டுக் கொண்டு வா! அவர் தங்கியிருக்கும் கூடாரத்துக்குப் போவோம். அங்கே நான் சொன்னபடி செய்!" என்று அழைத்துக்கொண்டு போனார்.

கூடாரத்தை அடைவதற்கு சற்று முன்பாக வெளியே நின்று கொண்டார் கண்ணன். "திரௌபதி! நான் சொல்கிறபடி செய். உன்னை நன்றாக முகத்திரையால் மூடி மறைத்துக்கொள். கூடாரத்துக்குள் நேரே சென்றுவிடு. பெண் என்பதால் உன்னை யாரும் தடுக்க மாட்டார்கள். பின்னர் பீஷ்மரின் காலில் வீழுந்து நமஸ்காரம் செய். அவர் உன்னை ஆசீர்வதிப்பார்! அது எனக்குப் போதும்" என்று சொன்னார்.

திரௌபதி கிளம்புமுன் கால் செருப்பைப் போட்டுக்கொண்டு பீஷ்மரிடம் போகத் தயங்கினாள். "அதை இங்கே விட்டுவிடு! நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று வாங்கி வைத்துக்கொண்டார் கிருஷ்ணன். திரௌபதி கூடாரத்துக்குள் போய் நமஸ்காரம் செய்ததும், "தீர்க்சுமங்கலி பவ!" என்று ஆசீர்வாதம் செய்துவிட்டார் பீஷ்மர். பிறகு "பெண்மணி! நீ யார்? எதற்காக இங்கே வந்தாய்?"என்று கேட்டார். திரௌபதி தனது முகததிரையை விலக்கியதும் திடுக்கிட்டுப் போனார். "தனியாக வந்தாயா திரௌபதி? உன்னை யார் அழைத்து வந்தது?" என்று கேட்டார். கிருஷ்ணன் அழைத்து வந்ததாகக் கூறியதும், அவா பகவானது லீலையைப் புரிந்து கொண்டுவிட்டார்.

திரௌபதிக்கு அவர் தீர்க்கமான சுமங்கலி என்ற வரத்தை அளித்து விட்டார். இனிமேல் அவரால் பாண்டவர்களில் யாரையுமே



கொல்ல முடியாது அல்லவா? அர்ஜுனனுடன் போரிட்டாலும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாமே தவிர, அர்ஜுனனை அழிக்க முடியாதே?

"கிருஷ்ணன் எங்கே?" என்று கேட்டார் பீஷ்மர். "கூடாரத்துக்கு வெளியே இருக்கிறார்!" என்று திரௌபதி சொன்னதும் அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். வெளியே திரௌபதியின் கால் செருப்புகளைக் கையில் ஏந்தியபடி நின்று கொண்டிருந்தார் பகவான்.

"சுவாமி! என்ன காரியம் இது? தாங்கள் செருப்பை ஏந்தி நிற்கலாமா?" என்று பதறியபடி கேட்டார் பீஷ்மர்.

பீஷ்மரே! தாங்கள் அறியாததா? நான் பக்தர்களுக்காக எதையும் செய்பவன். அதுவும் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால் எந்த வேலையையும் செய்யத் தயங்கமாட்டேன். செருப்பை ஏந்தினால் என்ன? அர்ஜுனனைக் காப்பாற்றி விட்டேன் அல்லவா? என்று கேட்டார் கிருஷ்ணன்.

பீஷ்மர் கைகூப்பித் தொழுதபடி பகவானின் காலில் விழுந்து வணங்கினார்.

*(நன்றி: ஞானபூமி)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பொய்யாமொழி ஜோதிடம்

கல்வி, விவாகம், புத்திரர், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம் போன்றவற்றில் தடைகள் நீங்க ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திருப்பப் பெறலாம். சனி, செவ்வாய் நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடியிலும, ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (89913)

## ஆனந்தா சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா?, வியாபாரம் சிறக்குமா?, விவாகம் நிகழுமா?, வெளிநாடு போகலாமா?, நோய் நீங்குமா?, காரியம் கைகூடுமா? கேட்டுப்பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் மூலமாகப் பலன் கூறப்படும். தொடர்பு: த.சிவானந்தன். பிரபல சோதிடர், ஆனந்தா சோதிடம், 216,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89960)

## கோயில் கட்டட நிர்மாணப் படம் வரைதல்

கோயில் கட்டடம், கோபுர வகைகள், சிறு கோயில் கட்டடங்கள் என்பனவற்றுக்கு சிறப்பான முறையில் படம் வரைந்து கொடுக்கப்படும். தொடர்பு:- சோம. சேதுபதி, கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (90004)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சொந்த வியாபாரம் புரியும் 7இல் செவ்வாய், உத்தர நட்சத்திரம், பாவக்கிரகம் 32, 1975ஆம் ஆண்டு பிறந்தவருக்கு அழகுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல.1325, மே/பா, உதயன். (89988)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ்கள், இதர பிளாஸ்டிக்காலான கை அடக்க அளவு கொண்ட வாட்டர்பம், ஜெனரேற்றர் போன்றவைக்குரிய ஒட்டியும் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301,கஸ்தூரியார் வீதி. (மேஸ்மார்டி, கன்னாதிட்டிச் சந்திக்கருகில்) (89981)

## தவறிவிட்டது

78/8, கடற்கரை வீதி, நாவாந்துறை என்ற முகவரியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.343021410X), விசேட அ.அட்டை என்பன யாழ்நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (90009)

கோண்டாவில் வீதி, கல்வியங்காடு என்னும் முகவரியைச் சேர்ந்த சிவபாதம் தனுசியா என்பவரது விசேட அ.அட்டை (இல.0903039003) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் அல்லது சிவபாதம் ஸ்ரோர்ஸ், கோண்டாவில் வீதி, இருபாலையில் ஒப்படைக்கவும். (89997)

மகாலிங்கம் ரதீஸ்கரன் என்பவரது தே.அ.அ.(இல.802944888V), வி.அ.அ.(இல.090905719) என்பன வல்லைக்கும் புத்தூருக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இரகுராமன் பல்பொருள் வாணிபம் (ஹரி கடை), மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு கரவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். **T.P.No: 070-212849** (C/18395)

சுப்பிரமணியம் சண்முகராசாவின் தே.அ.அட்டை (இல.553582032V), விசேட அ.அ.(இல.0907000722) என்பன மல்லாகம் கைலாச வைரவ கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆசிரியர் வே.தட்சணாமூர்த்தி, பங்களா லேன், மல்லாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (90014)

"**VISVAKARMA PAYMENT**" என்று பெயரிடப்பட்ட பைல் பலாலி வீதி, ஆரியகுளம் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பைலிலுள்ள முகவரியில் அல்லது சிவன் மாளிகை, 166, **K.K.S.** வீதியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (90016)

## BINDERS தேவை

**Book Binders** தேவை. நேரில் வரவும். பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C-17376)**



### பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

### வருடாந்த மகோற்சவம்

விஷு வருடம் ஆடித் திங்கள் –2001

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : | இன்று (13-07-2001) - வெள்ளிக்கிழமை |
| வேட்டைத் திருவிழா | : | 22-07-2001 - ஞாயிற்றுக்கிழமை |
| தேர்த்திருவிழா | : | 23-07-2001 - திங்கட்கிழமை |
| தீர்த்த திருவிழா | : | சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையில் 24- 07-2001 - செவ்வாய்க்கிழமை. |
| வைரவர் மடை | : | 25-07-2001 - புதன்கிழமை. |
| பூங்காவனம் | : | 27-07-2001 - வெள்ளிக்கிழமை |
| மஹோற்சவ பிரதம குரு | : | |

"சிவாகம கிரியா கலாபமணி" "சிவபூஜாரத்தினம்"

**வீரசைவ சிவஸ்ரீ நவரத்தினபிரபுதேவக் குருக்கள்**

*(கொழும்புத்துறை கிழக்கு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு)*

**வீரசைவ சிவஸ்ரீ வே.பேரின்பநாதக் குருக்கள்**

**வீரசைவ சிவஸ்ரீ க.சதாசிவக் குருக்கள்**

**வீரசைவ சிவஸ்ரீ வே.பாலசுப்பிரமணியம் ஐயா**

(மேற்படி தேவஸ்தான ஆதீனகர்த்தாக்களும் குருமாரும்)

(90010) பனிப்புலம், பண்டத்தரிப்பு

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம்மாதம் 11ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:

### சங்கானை

| | | |
|---|---|---|
| (189495ஏ) | (189495பி) | (189495சி) |
| (189495டி) | (189495ஈ) | (195979ஏ) |
| (195979பி) | (195979சி) | (195979டி) |
| (196961ஏ) | (197068ஏ) | (197128ஏ) |
| (197130ஏ) | (197130பி) | (197181ஏ) |
| (197881ஏ) | (197881பி) | (197881சி) |
| (198019ஏ) | (198019பி) | (198143ஏ) |
| (198143பி) | (198143சி) | (198666ஏ) |
| (198666பி) | (198688ஏ) | (198688பி) |
| (198763ஏ) | (198763பி) | (198798ஏ) |
| (198798பி) | (198799ஏ) | (198835ஏ) |
| (198835பி) | (198847ஏ) | (198848ஏ) |
| (198848பி) | (198848சி) | (198883ஏ) |
| (198884ஏ) | (198942ஏ) | (199324ஏ) |
| (199324பி) | (199331ஏ) | (199384ஏ) |
| (199385ஏ) | (199385பி) | (199385சி) |
| (199385டி) | (199386ஏ) | (199386பி) |
| (199386சி) | (199386டி) | (199386ஈ) |
| (199400ஏ) | (199727ஏ) | (199551ஏ) |
| (199551பி) | (199558ஏ) | (199575ஏ) |
| (201473ஏ) | (201473பி) | (201505ஏ) |
| (201505பி) | (201505சி) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (190516ஏ) | (191797ஏ) | (193617ஏ) |
| (193617பி) | (194370ஏ) | (195006ஏ) |
| (195060ஏ) | (195060பி) | (195060சி) |
| (195075ஏ) | (195076ஏ) | (195076பி) |
| (195997ஏ) | (196996ஏ) | (196996பி) |
| (197021ஏ) | (197021பி) | (197021சி) |
| (197021டி) | (197156ஏ) | (197916ஏ) |
| (197921ஏ) | (197921பி) | (197942ஏ) |
| (197942பி) | (197944ஏ) | (197944பி) |
| (197968ஏ) | (197976ஏ) | (197976பி) |
| (198012ஏ) | (198065ஏ) | (198692ஏ) |
| (198692பி) | (198692சி) | (198692டி) |
| (198701ஏ) | (198701பி) | (198701சி) |
| (198779ஏ) | (198822ஏ) | (198840ஏ) |
| (198840பி) | (198842ஏ) | (199355ஏ) |
| (199355பி) | (199366ஏ) | (199366பி) |
| (199511ஏ) | (199511பி) | (199550ஏ) |
| (199563ஏ) | (201484ஏ) | (201570ஏ) |
| (201570பி) | | |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (175057ஏ) | (185133ஏ) | (185133பி) |
| (185133சி) | (189361ஏ) | (189484ஏ) |
| (190586ஏ) | (192394ஏ) | (192394பி) |
| (192395ஏ) | (194428ஏ) | (195980ஏ) |
| (195980பி) | (195980சி) | (196023ஏ) |
| (196023பி) | (196917ஏ) | (196926ஏ) |
| (196930ஏ) | (196930பி) | (197041ஏ) |
| (197041பி) | (197041சி) | (197168ஏ) |
| (197932ஏ) | (197932பி) | (198008ஏ) |
| (198008பி) | (198035ஏ) | (198035பி) |
| (198043ஏ) | (198043பி) | (198653ஏ) |
| (198653பி) | (198653சி) | (198653டி) |
| (198700ஏ) | (198700பி) | (198700சி) |
| (198700டி) | (198700ஈ) | (198700எவ்) |
| (198720ஏ) | (198724ஏ) | (198724பி) |
| (198730ஏ) | (198730பி) | (198755ஏ) |
| (198755பி) | (198788ஏ) | (198788பி) |
| (198828ஏ) | (199335ஏ) | (199359ஏ) |
| (199360ஏ) | (199365ஏ) | (199543ஏ) |
| (199561ஏ) | (199561பி) | (199561சி) |
| (199576ஏ) | (201523ஏ) | |

### தெல்லிப்பழை

| | | |
|---|---|---|
| (192368ஏ) | (195937ஏ) | (195937பி) |
| (195965ஏ) | (195965பி) | (195965சி) |
| (195965டி) | (196025ஏ) | (195025பி) |
| (195025சி) | (197175ஏ) | (197175பி) |
| (197918ஏ) | (198766ஏ) | (199533ஏ) |
| (199533பி) | (201607ஏ) | (201607பி) |
| (201607சி) | (201607டி) | (201607ஈ) |
| (201607எவ்) | | |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (120154ஏ) | (158751ஏ) | (158751பி) |
| (188656ஏ) | (188656பி) | (188656சி) |
| (192074ஏ) | (192074பி) | (192075ஏ) |
| (194359ஏ) | (194471ஏ) | (194471பி) |
| (194487ஏ) | (194487பி) | (194876ஏ) |
| (194920ஏ) | (194920பி) | (195005ஏ) |
| (195005பி) | (195005சி) | (195011ஏ) |
| (195011பி) | (195101ஏ) | (195832ஏ) |
| (195832பி) | (195864ஏ) | (195908ஏ) |
| (195908பி) | (195908சி) | (195988ஏ) |
| (195988பி) | (195989ஏ) | (195990ஏ) |
| (196087ஏ) | (196087பி) | (196089ஏ) |
| (196953ஏ) | (196953பி) | (197050ஏ) |
| (197050பி) | (197054ஏ) | (197054பி) |
| (197879ஏ) | (197879பி) | (197879சி) |
| (197879டி) | (197879ஈ) | (197931ஏ) |
| (197931பி) | (198001ஏ) | (198013ஏ) |
| (198064ஏ) | (198121ஏ) | (198652ஏ) |
| (198665ஏ) | (198682ஏ) | (198682பி) |
| (198682டி) | (198682சி) | (198740ஏ) |
| (198740பி) | (198750ஏ) | (198750பி) |
| (198750சி) | (198830ஏ) | (198830பி) |
| (198882ஏ) | (198908ஏ) | (199327ஏ) |
| (199327பி) | (199380ஏ) | (199438ஏ) |
| (199438பி) | (199438சி) | (199468ஏ) |
| (199552ஏ) | (201519ஏ) | (201612ஏ) |
| (201660ஏ) | | |

(க-10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும், நயினாதீவு மகா வித்தியாலய அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் கடமையாற்றி, பதவி உயர்வுபெற்று நெடுந்தீவு கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி தற்போது வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் உயர்வு பெற்றுள்ளார்.

இவர் எமது நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும், மென்பந்தாட்ட அணியின் முன்னணி வீரராகவும், எமது நிலையத்தின் காப்பாளராகவும் செயலாற்றி வருகின்றார்.

தீவகம் யாழ்ப்பாணத்துடன் துண்டிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பெரும் பணியாற்றியவரான

**உயர்திரு.சோமசுந்தரம் தில்லைநாதன்**

**அவர்கள் 01-06-1994 முதல் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு (S.L.P.S.1)**

**பதவி உயர்த்தப்பட்டமையை**

மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**நிர்வாகம்,**
**ஸ்ரீகணேச சனசமூக நிலையம்,**
**நயினாதீவு.**

(C/17397)

# 23ஆவது ஆண்டு நினைவஞ்சலி

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்தவரும், மானிப்பாயில் வசித்தவருமாகிய

**டாக்டர் சரவணமுத்து சோமசுந்தரம்** (R.M.O)

(அரசினர் வைத்தியசாலை - நவாலி மானிப்பாய்)

**மலர்வு: 02.11.1912** **உதிர்வு: 27.07.1978**

திதி:- 13.07.2001

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து**
**தெய்வமாகி எல்லோரையும் வாழவைத்த**
**எங்கள் அன்புத் தெய்வமே!**
**உங்களை என்றும் நினைவுகூரும்:**

*டாக்டர் சோ.சுந்தரராஜன்*
*"கிருஸ்ணா"*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (90006)

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.


# NIPPON GAS COOKER

**வேறு எந்த தயாரிப்புடனும்**

**ஒப்பிட்டுப் பாருங்கள்**

1. நிறை
2. Stainless Steel இன் தடிப்பு
3. தன்னியக்க பற்றவைக்கும் கருவியின் தரம்

*இலகுவில் கட்டுப் படுத்தக்கூடியதன்னியக்க பற்றவைக்கும் கருவி கொண்ட*



*நிப்பொன் காஸ் குக்கர்கள்*

*மூலம் காஸை சேமியுங்கள்*

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11. Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc, Colombo-04. Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


சிவமயம்

# திருமண வாழ்த்து

இன்று (13-07-2001) வெள்ளிக்கிழமை சென்னை வடபழனி ஆலய மண்டபத்தில் புதுமணத் தம்பதிகளாக இணையும்

திரு.திருமதி சுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகளின் புத்திரன்
**ஜெயானந்தராஜா** (ஜெயா)
(கனடா)

திரு.திருமதி கிருஷ்ணபிள்ளை தம்பதிகளின் புத்திரி
**சாருலதா** (சாரு)
(ஆசிரியை மட்டக்களப்பு)

தம்பதிகளை சகல சௌபாக்கியங்களும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் அருளும் ஆசியும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

சகானா தொலைத்தொடர்பு,
'ஆனந்த வாசா'
வியாபாரி மூலை, பருத்தித்துறை.
தொ.இல. 212501

(90005)

திரு-திருமதி சு.சிவானந்தராஜா
குடும்பத்தினர்,
மு.சிதம்பரநாதக் குருக்கள்.

# தமிழையும் சைவத்தையும் பேணுவதில் லண்டன் தமிழர்கள் அதிக ஈடுபாடு

## அங்கு சென்று திரும்பிய குருகுல அதிபர் கூறுகிறார்

வலி.தெற்கு,ஜூலை13

"பிறநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்பவர்கள் எமது பண்பாடுகள், கலாசாரங்கள் என்பவற்றைக் கைவிட்டு, அந்நிய நாகரிகத்தில் மூழ்கி உள்ளார்கள் எனப் பொதுவாகக் கூறப்படுவதை ஏற்க முடியாது. லண்டன் மாநகரில் நான் கண்ட தமிழ்ச் சமூகம் இன்னமும் தமது பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் பேணிக்காத்து வருகின்றது"

பல்வேறு சமயப் பணிகளுக்காக அண்மையில் லண்டன்சென்று வந்துள்ள இணுவில் காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களே இவ்வாறு கூறினார்.

லண்டனில் வசிக்கும் சைவமக்கள் பற்றியும் சைவசமய செயற்பாடுகள் பற்றியும் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சில காலங்களுக்கு முன்பு "லண்டனில் குடியேறிய தமிழர்கள் சிலர் அங்குள்ளவர்களின் நாகரிகத்தை உள்வாங்கி உள்ளனர் என்பது உண்மை. ஆனால், அண்மைக்காலங்களில் அங்கு சென்று வாழும் தமிழ் மக்கள் தமிழ் மொழியையும், கலாசாரம், பண்பாடு, சமய வழிபாட்டு முறைகளையும் அழியவிடாமல், பாதுகாக்கவும் அவற்றைப் பரப்பவும் முனைந்து நிற்பதைக் காணமுடிந்தது.

சமயவிழாக்கள், வழிபாடுகள், திருமணம் போன்ற நிகழ்வுகள், பிதுர்க்காரியங்கள் போன்றவற்றை இன்றும் உரிய முறைப்படி செய்து வருவதுடன் இலங்கைத் தமிழர்கள் அதில் காட்டும் உற்சாகத்தை விடக் கூடிய கரிசனையை அவர்கள் கொண்டுள்ளார்கள்.

அந்த நாட்டின் காலநிலைக்கு ஏற்ப உடைவிடயத்தில் சில மாறுதல்கள் காணப்பட்டுள்ள போதிலும் பண்பாடு, பழக்கவழக்கங்கள் மாற்றமடையவில்லை.

### கோயில்களும் அமைப்புக்களும்

லண்டன் நகரில் பல சைவக் கோயில்கள் உள்ளன. ரூட்டிங் மாரியம்மன், அர்ச்சவே முருகன் (இதுவே முதன்முதலாக அங்கு அமைக்கப்பட்டது) விம்பிள்டன் பிள்ளையார், ஈலிங் கனகதுர்கா அம்மன், ஈஸ்ராம் முருகன், சுழுபுதி சிவன், ஹரோ சிவன், போன்றவை பிரசித்தமான ஆலயங்கள்.

கோயில்களைப் புதிதாகக் கட்டுவது அங்கு சிரமம். கட்டப்பட்ட கட்டடங்களை நம்மவர்கள் விலைக்கு வாங்கி, அவற்றைக் கோயில்களாகப் பயன்படுத்துகின்றனர். இதில் வருத்தப்படக் கூடிய விடயம் என்னவென்றால் ஏற்கனவே கிறிஸ்தவ கோயில்களாக இருந்த கட்டடங்களில் சில சைவக் கோயில்கள் இயங்கி வருவதாகும். வெளிப்பார்வைக்கு கிறிஸ்தவக் கோயில்களாகக் காணப்படினும் உள்ளே சைவக் கோயில் பூசைகள், திருவிழாக்கள் என்பன நடைபெறுகின்றன. கோயில்கள் எல்லாவற்றுடனும் இணைந்த கல்யாண மண்டபங்கள் காணப்படுகின்றன. கல்யாண நிகழ்வுகளுக்கு இலங்கைக் குருமார்களை விரும்பி அழைக்கின்றனர்.

### சாகம்பரி உற்சவம்

ரூட்டிங் மாரியம்மன் ஆலயத்தில் 18 நாள்கள் திருவிழா நடைபெறும். திருவிழா முடிந்த பின் விசேட திருவிழாவாக காய்கறித் திருவிழா நடைபெறும். கொடி இறக்கத்தின் பின் பல்வேறு காய்கறிகளைக் கொண்டு அம்மனை அலங்கரித்து பூசை செய்கின்றார்கள். பின்னர் அக்காய் கறிகளை எடுத்து அடியவர்களுக்கு வழங்குவார்கள்.

யாக பூசைகள் திருவிழாக் காலங்களில் மிக விஸ்தாரமாக நடைபெறுகின்றன. சுவாமிக்கு ஏராளமான பவுண் நகைகளை நீண்ட நேரம் செலவிட்டு அலங்காரம் செய்கின்றார்கள். அலங்கரிப்பதில் விசேட கவனம் செலுத்துகிறார்கள்.

குருமார்களை முதனிலைப் படுத்தியே சகல கருமங்களையும் செய்கின்றனர். அவர்களின் சொல்லை தேவவாக்காக கருதுகின்றனர். திருவிழா அமைப்பு, நிர்வாகம், செயற்பாடுகள் அனைத்தும் குருமாரின் பூரண விருப்பம், சம்மதப்படியே நடைபெறுகின்றன.

கோயில்களுக்கு ஆசார சீலர்களாக வருவதுடன் சைவசமய பண்பாடுகளுக்கமைய பெண்கள் அனைவரும் சேலை உடுத்து, தலையில் பூச்சூடியே வருகின்றனர். ஆலயங்கள் மூலமாக சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

### ஆங்கிலேயரின் ஆர்வம்

சைவசமயக் கிரியைகள், வழிபாட்டு முறைகள், என்பவற்றின் சிறப்பை உணர்ந்து அதன் வழிநடக்க பல ஆங்கிலேயர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். பெண்கள் கூட சைவ சமய ஒழுங்குப் படி சேலை உடுத்து வருகின்றனர். நாம் மந்திரங்களை உச்சரிக்கும் போது அவர்களும் அதனை கூறமுனைகின்றனர். கணபதி வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். நான் அங்கு நடத்திய கணபதி ஹோமம் ஒன்றில் ஆங்கிலேயர் பலர் விருப்புடன் பங்குபற்றி அம்மனின் நாமங்களைக் கூறி வழிபட்டனர்.



விம்பிள்டன் பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ.விக்னேஸ்வரக் குருக்கள் ஈஸ்ராம் முருகன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ நாகநாத சிவாசாரியார் ஆகியோர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கின்றனர்.

சமயப் பிரசங்கம் செய்ய எனப் பலர் வருகை தந்தாலும் செஞ்சொற் கொண்டல் ஆறு.திருமுருகனுக்கு லண்டன் நகர மக்கள் தனி மதிப்பு, மரியாதை கொடுக்கின்றனர். எல்லா ஆலய அறங்காவலர்களும் திருமுருகனை தெய்வத்தின் பிரதிநிதியாகக் கருதுகின்றனர். தவத்திரு. கிருபானந்தவாரியாருக்கு நாம் கொடுக்கும் மதிப்பை ஒத்த மதிப்பு - மரியாதை - அவருக்கு அங்கு கொடுக்கப்படுகின்றது. இலங்கையில் உள்ள பல நலன் புரிமன்றங்களுக்கு திருமுருகனின் வேண்டுகோளை ஏற்று, பெருமளவில் உதவிகளை மக்கள் வழங்கி வருகின்றனர்.

### ஈஸ்ராம் முருகன் ஆலயம்

இந்தியாவைச் சேர்ந்த நாகநாத சிவாசாரியார் இங்கு பூசை செய்கிறார். எவரும் செல்ல அஞ்சும் குளிர்ப் பிரதேசமான கைலாச மலையில் உள்ள 'மானசஸ்ரோவை' அடைந்து பெரியதொரு ஹோமம் செய்துள்ளார். சகல தமிழ் மக்களையும் வசீகரித்துக் கொண்டுள்ள நிரம்பிய அறிவும், சித்தாந்த புராண அறிவும் மிக்கவரான நாகநாத சிவாசாரியார் உலக நன்மைக்காக இப்போது கோடி நாம அர்ச்சனை ஆரம்பித்துள்ளார்.

உள்ள வளங்களைக் கொண்டு திருப்தியான பூசைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அறைகளில் தான் கோயில்கள் காணப்படுவதால் உற்சவ காலங்களில் தேரும் அந்த அறைக் கட்டடத்தினுள்ளேதான் இழுக்கப்படுகின்றது. அநேகமான கோயில்களில் தீர்த்தமாடும் கேணி செசதிகள் இல்லை. தீர்த்த காலத்தில் சிறு தொட்டிகளை அமைத்து அவற்றைக் கேணியாகப் பாவித்து தீர்த்தம் நடைபெறுகின்றது.

ஈலிங்கன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற லட்சார்ச்சனையில் ஏழு நாள்கள் பங்கு பற்றினேன். ஹோம திரவியங்களுக்கு அங்கு எவ்வித குறையும் இல்லை. சகல சமித்து வகைகளும் தாராளமாகத் தரப்படுகின்றன.

கற்பூரம் கொளுத்துவதை சில கோயில்களில் நிறுத்தி உள்ளார்கள். கற்பூரத்துக்குப் பதிலாக நெய்த் தீபங்கள் அங்கு ஏற்றப்படுகின்றன. - என்று அவர் தெரிவித்தார். (ஐ-152)

# நாடாளுமன்றை ஒத்திவைத்தமை ஜனநாயக விரோதச் செயற்பாடு!

## மக்களை அணிதிரள அறைகூவல் விடுக்கிறார் ரணில்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஏகாதிபத்தியத்தை நோக்கிச் செல்லும் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார். அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைப்பது ஜனநாயகத்துக்கும் அரசியலமைப்புக்கும் எதிரான நடவடிக்கையாகும். இதற்கு எதிராக சகல அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், சிவில் அமைப்புகளும், பொதுமக்களும் அணிதிரள வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அறைகூவல் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தாம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இந்த அறைகூவலை விடுத்தார். அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

அரசாங்கத்தை நீக்குவதற்கான நம்பிக்கையில்லாப் பிரேரணை, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு அண்மித்திருந்தது. இவ்வேளையில் ஜனநாயகக் கட்டுக்கோப்புக்குப் புறம்பாக, ஜனாதிபதி ஏகாதிபத்தியத்தை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளார். நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்ததன் மூலம் ஜனாதிபதியின் ஏகாதிபத்திய சொரூபம் நன்கு தெளிவாகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை இம்மாதம் 18 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இதற்காக 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கையெழுத்திட்டு ஒரு மனுவை சபாநாயகரிடம் ஒப்படைத்திருந்தனர். இதன்மூலம் சந்திரிகாவின் நிர்வாகம் சிறுபான்மையான உறுப்பினர்கள் கொண்ட அரசாங்கமாக மாறியது. இதனால் நாடாளுமன்றத்தில் அவமானத்துக்குள்ளான சந்திரிகாவின் அரசாங்கம் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் ஏகாதிபத்தியத் தீர்மானத்தை எடுத்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் சிறுபான்மையாக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் இராஜினாமா செய்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில், நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைப்பது ஜனநாயக, அரசமைப்பு விரோத நடவடிக்கையாகும்.

சந்திரிகா இத்தீர்மானத்தை அமைச்சரவையிலோ, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களுடனோ பேச்சுவார்த்தை நடத்தி எடுக்கவில்லை.

தனித் தீர்மானம் எடுத்ததன் மூலம் சந்திரிகாவின் துஷ்ட, முறைகேடான, ஏகாதிபத்திய சொரூபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றுவேளை உணவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் இல்லாத நாட்டு மக்கள் தமது ஆதரவை இந்தத் தவறான அரசுக்கு வழங்கமாட்டார்கள்.

அத்தகைய வேளையில் இந்த அரசாங்கம் தனது நிடிப்புக்காக மட்டுமே செயற்படுகின்றது. அரசாங்கத்தின் நிந்தையான இச்செயல் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாகவும் அமைந்துள்ளது. ஐ.தே.க.சி இந்நடவடிக்கையை வன்மையாகவும் உறுதியுடனும் எதிர்க்கின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிறிஸ்தவ பாட மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கிறிஸ்தவ பாடநெறி மீட்டல் ஆயத்த வகுப்புகள் நாளை சனியும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் புனித பத்திரிசியார் கல்லூரியின் சிமித் மண்டபத்தில் நடைபெறும். (க-10)

## கூட்டுறவு மாநாடு

அரியாலை,ஜூலை13

யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களுக்கான மாதாந்தக் கூட்டுறவு மாநாடு இன்று வெள்ளிக்கிழமை 10 மணிக்கு கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். இந்த மாநாட்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்கள் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# குடிசன மதிப்பீட்டை நிறுத்துமாறு அரசிடம் மீண்டும் கேட்க முடிவு

## 11 தமிழ்க்கட்சிகள் தீர்மானம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளும் பணியை உடனடியாகக் கைவிடுமாறு அரசாங்கத்திடம் மீண்டும் ஒருதடவை கோருவது என்று பதினொரு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டமைப்பின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் 17ஆம் திகதி இலங்கை அரசால் மேற்கொள்ளப்படஇருக்கும் குடிசன மதிப்பீட்டின் இறுதிக் கணக்கெடுப்பினால் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையும் அது தொடர்பான விடயங்களும் உண்மை நிலைக்குப் புறம்பான விதத்தில் பிரதிபலிக்கப்படும் என்பதாலும் -

அதன் காரணமாகத் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதாலுமே-

வடக்கு - கிழக்கில் இந்தக் குடிசன மதிப்பீட்டை உடனடியாகக் கைவிடுமாறு அரசைக் கோருவது என்று முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## தெய்வீக ஸ்தலங்களில்



சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தினர் மஹோற்சவத்தை ஒட்டி மாணவர்கள் மத்தியில் பலதரப்பட்ட சமயப் போட்டிகளை நடத்தினர். பரிசளிப்பு விழாவின் போது சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்குவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா, ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சபா.வாசுதேவசர்மா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-175)



1750ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த உடுவில் மல்வம் ஸ்ரீ கந்தசாமி ஞானவைரவர் ஆலய புனருத்தார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி பாலஸ்தாபனம் நடைபெற்றது. கோயில் புனருத்தாரணப் பணிகளுக்கான அடிக்கல் வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர் க.கமலசேகரனால் நடப்பட்டது. அவர் சங்கு தாழ்ப்பதைப் படத்தில் காணலாம். சிவஸ்ரீ கா.குகானந்தக் குருக்கள், ஆலய நிர்வாக சபைத் தலைவர் க.அசோகன், ஆசாரியார் மாரிமுத்து ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-152)

# படையினரை வாபஸ் பெறக் கோரிக்கை

வலி.மேற்கு,ஜூலை13

பொன்னாலை கிருஷ்ணன் கோயில் மடங்களில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை விலகிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொன்னாலை கிருஷ்ணன் கோயிலுக்கு முன்பாகவுள்ள மடங்களில் பலவருடங்களாக நிலைகொண்டுள்ள கடற்படையினரை வாபஸ் பெற்று ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களுக்கு உதவிபுரியுமாறு வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (க-175)


# நன்றி தெரிவிக்கின்றோம்



வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைச்சின் கீழ் யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தித் தொண்டருக்கான பயிற்சி நெறியை ஏற்படுத்தித்தந்த

**மாண்புமிகு கௌரவ அமைச்சர்**

**K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்

அபிவிருத்தித் தொண்டர்களாக எம்மைத் தேர்ந்தெடுத்து இப் பயிற்சி நெறியைப் பின்பற்ற உதவிய யாழ். பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமாகிய **து.ரீகன்** அவர்களுக்கும்

எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- அபிவிருத்தித் தொண்டர்கள்,ஊக்குவிப்பாளர்கள்,
*யாழ்.பிரதேச செயலாளர் பிரிவு,*
*யாழ்ப்பாணம்.*

(89990)



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 1941 - 07 - 13



மறைவு 2000 - 06 - 24

**அமரர் சாமிஜயா செல்லையா**

**திதி: அபரபட்ச ஸப்தமி**

நாம் முளைவிட்டுத் தளிர் விடும் வேளையில்
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்ற தந்தையே!
நேற்றுவரை பக்கத்தில் இருந்த உங்களை
இன்றோடு இதயத்தில் இருத்திவிட்டு
இருளில் தத்தளிக்கின்றோம் - உங்கள்
நினைவுகள் என்றும் எங்கள்
நெஞ்சங்களில் நிழலாடும்.


உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

*15ஆம் கட்டையடி, உடுப்பிட்டி.* (89975)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 06 - 1925



உதிர்வு 25 - 06 - 2000

**அமரர் கதிர்காமு பத்மநாதன்**

(ஓய்வு பெற்ற அதிபர்)

திதி:13-07-2001

**எமது அன்புத் தெய்வமே!**
**ஆண்டு ஒன்று சென்றாலும்**
**உங்கள் அன்பு நினைவுகள்**
**என்றென்றும் மாறாது..**

உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்கள்.**

*முதலாம் வட்டாரம், நயினாதீவு.* (89989)


## மூலிகைத்தோட்டம் அமைக்க ஏற்பாடு

வடமராட்சி,ஜூலை13

கரவெட்டி கலைநேசன் சனசமூக நிலையம் இயற்கை மூலிகைத் தோட்டம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதற்கென மூன்று பரப்புக்காணி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்காணியில் மூலிகைகளை நட்டு பராமரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-173)

## வல்லையில் பாதீனியம் ஒழிப்பு

வடமராட்சி,ஜூலை13

வல்லையில் காணப்பட்ட பாதீனியம் களைகள் கரவெட்டி கலைநேசன் சனசமூக நிலையத்தினரால் அழிக்கப்பட்டன.

கரவெட்டிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், புலோலி விவசாயப் போதனாசிரியர் பி.பாலசுப்பிரமணியம் பாதீனியம் களைகள் அழிக்கப்பட்ட வல்லை வெளியைப் பார்வையிட்டு, கலைநேசன் சனசமூக நிலையத்தினருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (க-173)

## மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை13

நல்லூர் தூரிகை நுண்கலை வளாகத்தின் மனைப்பொருளியல் கண்காட்சி நாளை சனிக்கிழமையும், மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கல்வியங்காடு செங்குந்தா வீதியில் உள்ள வளாகத்தில் நடைபெறும்.

கண்காட்சி முடிவில் பயிற்சி பெற்றோர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். (க-173)

## மாதாந்த உதவிப் பணம் பெறும் தினங்கள் குறித்து அறிவிப்பு

வலி.மேற்கு,ஜூலை13

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் வறியவர்கள் ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதிவரையுள்ள வேலை நாள்களில் அந்தக் கொடுப்பனவைத் தவறாமல் பெற்றுக்கொள்ளுமாறு தபாலதிபர்கள் அறிவித்துள்ளனர்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள தபாற்கந்தோர்கள், உப தபாற்கந்தோர்கள் மூலம் சுமார் 1400 வறியவர்கள் இந்த உதவிப் பணத்தைப் பெறுகின்றனர்.

இக்காலப் பகுதியில் மட்டுமே உதவிப் பணம் வழங்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் கொடுப்பனவைப் பெறமுடியாது போய்விடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-175)

# NOTICE

The University of Jaffna is closed on the directive of the University Grants Commission. This applies only to the Students of the Univetsity.

All Academic and Non-academic Staff Shall report for duty as usual.

In the meantime every effort will be made to restore normalcy soon with the Co-operation of the staff and students of the University.

(C/17384)

**(Prof.P.Balasunderampillai)**
**Vice-Chancellor**


# யா/விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்

## 125ஆவது ஆண்டு விழா (1876-2001) அழைப்பு

காலம்:- **இன்று(13-07-2001) வெள்ளிக்கிழமை**
பிற்பகல்.2.00 மணி

இடம்:- **கல்லூரி திறந்த வெளியரங்கு**

*இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்*

தலைவர்:- **திரு.வே.நாகராசா**
*(தலைவர், பழைய மாணவர் சங்கம்)*

பிரதம விருந்தினர்:- **திரு.ந.திரிலோகநாதன் J.P.U.M.**
*(தலைவர், வலி.மேற்கு பிரதேச சபை)*

சிறப்பு விருந்தினர்கள்:- **கா.சந்திரராசா**
*(ஓய்வுபெற்ற பிரதேச செயலர்)*

**திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்**
*(சமூக இணைப்பாளர் G.T.Z. நிறுவனம்)*

*நிகழ்ச்சி நிரல்*

- ★ மங்கள விளக்கேற்றல்
- ★ இறைவணக்கம்
- ★ வரவேற்புரை:- திரு.தி.உதயசூரியன் J.P. (செயலாளர், பழைய மாணவர் சங்கம்)
- ★ தலைவர் உரை
- ★ அதிபர் உரை
- ★ கௌரவிப்பு நிகழ்வு:- கௌரவிக்கப்படுவோர் கல்லூரியில் இருந்து இளைப்பாறிய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா அலுவலர்கள்.
- ★ சிறப்பு விருந்தினர் உரை
- ★ பிரதம விருந்தினர் உரை
- ★ *கலைநிகழ்ச்சிகள்* ★
- ★ நன்றியுரை:- திரு.சி.க.இந்திரராசா (செயலாளர் - விழாக்குழு)
- ★ கல்லூரி கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(89895) - விழாக்குழுவினர்.



உ
சிவமயம்



# காரைநகர் சிவன் கோயில்

## (ஈழத்துச் சிதம்பரம்)

## வருடாந்த ஆடி தேவி மகோற்சவம் - 2001

**சிவநேயர்களே!**

நிகழும் விஷு வருடம் ஆனி மாதம் 31 ஆம் திகதி (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் பெருந்திரளாக வந்து, மகோற்சவத்தினைக் கண்டு, தேவியை வணங்கி, இஷ்டசித்திகளைப் பெற்றேகுக.

★ மகோற்சவ கிரியை விவரம் ★

**15.07.2001** **விஷு வருடம் ஆனி மாதம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றம்:**
காலை 11.00 மணியளவில் கொடியேற்றம். அதனைத் தொடர்ந்து அம்பாள் இடப வாகனத்தில் திருவீதி உலா நடைபெறும்.

**18.07.2001** **ஆடிமாதம் 03ஆம் திகதி புதன்கிழமை கைலாசவாகனத் திருவிழா:**
மாலை 6.00 மணியளவில் கைலாச வாகனத்தில் அம்பாள் திருவீதி உலா.

**23.07.2001** **ஆடிமாதம் 07ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா:**
காலை 11.00 மணிக்கு அம்பாள் தேருக்கு எழுந்தருளல்.

**24.07.2001** **ஆடிமாதம் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேவி தீர்த்தம், ஆடிப்பூரம்:**
காலை 10.00 மணியளவில் தீர்த்தோற்சவமும்,
மாலை 6.00 மணிக்குக் கொடியிறக்கமும் நடைபெறும்.

*குறிப்பு:* தினமும் காலைத் திருவிழா காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும். மாலைத் திருவிழா மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

**விசேட பஸ் சேவை**

திருவிழாக் காலத்தில் தினமும் காலை 7.00 மணிக்கு 782 பாதையிலும் காலை 8.15 மணிக்கு 786 பாதையிலும், யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ், ஈழத்துச் சிதம்பரம் ஊடாகச் சேவையில் ஈடுபடும். பிற்பகல் 1.30 மணியளவில் ஆலயத்தில் இருந்து பஸ்சேவை நடைபெறும்.

**ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்,**
ஆதீனகர்த்தாக்கள்.

*சிவன் கோயில், காரைநகர்.* (C/17389)

## வலி. மேற்குப் பிரதேச செயலர் பகுதியில்

# கிராம அலுவலர் பிரிவுகளில் விழிப்புக்குழு அமைக்க முடிவு

வலி மேற்கு, ஜூலை 13

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும், விழிப்புக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பணிப்பினை கிராம அலுவலர்களுக்கு பிரதேச செயலர் வழங்கியுள்ளார்.

கசிப்பு, திருட்டு மற்றும் சட்டவிரோதமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் தலைமையில் வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள 25 கிராம அலுவலர் பிரிவிலும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

விழிப்புக்குழுக்கள் தொடர்பாகப் பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கையில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளன. திருட்டுக்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் விழிப்புக் குழுக்கள் அவசியமானது. இந்த விழிப்புக் குழுக்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

(க–175)

## வெள்ளைப் பூரான் கடித்து இவ்வருடம் 98 பேர் சிகிச்சை!

வடமராட்சிப் பகுதியில் வெள்ளைப் பூரானால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் இவ் வருடத்தில், கடந்த திங்கட்கிழமை வரை 98 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை —

மிருசுவில் விடத்தற்பளையிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை தம்பசிட்டியில் தங்கியுள்ள செல்லத்துரை துரைசிங்கம் (வயது 47) என்பவர் கடந்த திங்கள் வெள்ளைப் பூரானால் கடியுண்ட நிலையில் மந்திகையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

( க - 117 )

## மண்வெட்டிப்பிடி அடியுடன் முடிந்த வாக்கு வாதம்

நாய்க்குட்டிப் பிரச்சினையால் ஏற்பட்ட வாக்கு வாதம் முற்றி மண்வெட்டிப்பிடி அடியுடன் முடிந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மிருசுவில் தவசிகுளத்தில் இடம்பெற்றது.

கச்சாய் பாலாவியைச் சேர்ந்த செல்லத்துரை நாகேந்திரம் (வயது 42) என்பவர் மண்வெட்டிப்பிடி அடியினால் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க–117)

## உள்ளூராட்சி செயலாளர்களின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல், எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மரம்நடுகை, ஆளணி அங்கீகரிக்கப்பட்ட — சபைகளுக்குரிய முன்பள்ளிப் பாடசாலைகளை முறையாக அமைத்தல், கணனி சஞ்சிகைகளை நூலகங்களில் இணைத்தல், தேசிய வைத்திய கடிதத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள், சூழல் பாதுகாப்புக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-16)

## ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வீதியை விட்டு விலகிய ஓட்டோ, மதில் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் தலையில் காயமடைந்தார்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஓட்டோவில் சென்றவரான நவாலியைச் சேர்ந்த கபிரியல் சூசைதாஸன் (வயது55) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க–15)

# பௌர்ணமி தின கலைவிழா; முதலாவது நிகழ்வு அராலியில்!

## வலி. மேற்கு கலாசாரப் பேரவை ஏற்பாடு

வலி.மேற்கு, ஜூலை 13

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி பௌர்ணமி நாளன்று அராலியில் கலைவிழா ஒன்று நடத்தப்படவுள்ளது.

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினர் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று பிரதேசத்தில் கலைவிழாக்களை நடத்துவது என்று தீர்மானித்துள்ளனர். இதன்படி முதலாவது கலைவிழா அராலியில் நடைபெறவுள்ளது.

அராலி வடக்கு, அராலி மேற்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த கலைஞர்களின் இயல், இசை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் கலை விழாவில் மேடையேற்றப்படவுள்ளன.

இந்தக் கலைவிழாவின் சகல ஏற்பாடுகளையும் இப் பகுதி கிராம அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர்.

(க–175)

## மோட்டார் சைக்கிள்கள் விவரம் பதிவு

வல்லை சோதனைச்சாவடி ஊடாகச் சென்று வந்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் கடந்த செவ்வாய்க்கிழமை படையினரால் பதிவு செய்யப்பட்டன.

இரு பக்கங்களிலும் உள்ள வெளியான பகுதிக்குள் இவை வழிமறிக்கப்பட்டு இலக்கங்கள், உரிமையாளர் பெயர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் உள்ள முகாம்களிலும் மோட்டார் சைக்கிள்கள் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ–117)

# வடக்கு–கிழக்கில் 3 ஆயிரம் பேருக்கு விரைவில் ஆசிரியர் நியமனங்கள்

## மாகாண கல்வி அமைச்சுச் செயலர் அறிவிப்பு

திருகோணமலை, ஜூலை 13

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் விரைவில் 3000 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். இதற்கான அனுமதியை மத்திய கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாக மாகாணக் கல்வி பண்பாடு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு—கிழக்கு மாகாண தமிழ் மொழித் தினவிழா கடந்த திங்கட்கிழமை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:–

தமிழ் மொழி எமது தாய் மொழி. இது கற்கை மொழியாகவும் அமைகின்றது. பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ் மொழியில் போதிக்கப்படுகின்றது. அப்படியிருந்தும் ஜி. சீ. ஈ சாதாரண தரத்தில் 10 வீதமான மாணவர்கள் தமிழ் மொழியில் சித்தி பெறாமல் உள்ளனர் என்பதை அறியும் போது வேதனையாக உள்ளது. சகல மாணவர்களும் தமிழ் மொழியில் சித்தி பெற அதிபர்களும், ஆசிரியர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மொழியாற்றல் போட்டிகள் மூலமாக வளர்த்தெடுக்கப்படுகின்றன. மாணவர்கள் பாடசாலைகளில் போட்டிகளில் பங்கெடுத்து மொழியாற்றலை வளர்த்துக் கொள்ள முடியும். மொழியின் அபிவிருத்தியே சமூகத்தின் அபிவிருத்தியாகக் கொள்ளப்படும்—என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் உரையாற்றுகையில் "எமது மாணவர்கள் ஓலைக் கொட்டில்களிலும், மரநிழலிலும், இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் இருந்து கல்வி கற்கின்றார்கள். அவர்கள் அரும் சொத்தான கல்வியை இழக்கத் தயாராயில்லை. காலத்தால் நிலைமைகள் மாறலாம் அல்லது தொடரலாம். ஆனால் நாங்கள் கல்வியைத் தொடர்ந்து அளிக்க வேண்டும். இந்தப் பொறுப்பு பெற்றோர்க்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு.

போட்டிகளின் ஊடாக நல்ல மனப்பாங்கினை மாணவர்கள் மத்தியில் வளர்க்க அதிபர்களும், ஆசிரியர்களும் முன்வர வேண்டும். இம்முறை நடைபெற்ற போட்டிகளில் கட்புலனற்ற மாணவர்கள் பங்குகொண்டு வெற்றி பெற்றது மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாறான மாணவர்களுக்கு விசேட கல்வியை வழங்கும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் — என்றார்.

இம்முறை நடைபெற்ற போட்டிகளில் வலய அடிப்படையில் திருகோணமலை வலயம் முதலாவதாகவும், மட்டக்களப்பு வலயம் இரண்டாவதாகவும், யாழ்ப்பாணம் வலயம் மூன்றாவதாகவும் வவுனியா தெற்கு வலயம் நான்காவதாகவும் வலிகாமம் வலயம் ஐந்தாவதாகவும் தெரிவு செய்யப்பட்டன.

(க-145)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் யாழ். பிறவுண் வீதி ஸ்ரீ. விக்கினேஸ்வரா பாலர் பாடசாலையின் ஒன்பதாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தகத் துறைத் தலைவர் கோ. ஜெயராஜாவும் அவரது பாரியாரும் கலந்துகொள்வர்.

(க–10)

★ ★ ★

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1–30 மணிக்கு உடுவில் மான்ஸ் பாடசாலையில் தி. தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர் க. கமலசேகரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவநேசன், கிராம உத்தியோகத்தர் செ.றோ. யேசுதாஸன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(ம-15.8)

★ ★ ★

வலிகாமம்தெற்கு, ஜூலை13

தாவடிவடக்கு விநாயகர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நாளை 14 ஆம் திகதி சனிக்கிழமைபிற்பகல் 1.30மணிக்கு நடைபெற உள்ளது. இப் போட்டிகளில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர் க. கமலசேகரன் கலந்துகொள்வார்.

(க-15.1)

### பாலியல் வன்முறைகளைக் கண்டித்து

# மட்டு. தேவாலய மைதானத்தில் புதன் பிரார்த்தனை நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூலை13

மருதானையில் தமிழ்ப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் தமிழ்ப்பெண்கள் மீது தொடரும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராகவும் இத்தகைய சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரியும் மட்டக்களப்பு நகரில் தாண்டவன் வெளி வியாகுலமாதா தேவாலய மைதானத்தில் கடந்த புதன்கிழமை பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சுதந்திர மனித அபிவிருத்திக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி அக்கழகத் தலைவர் எஸ். சிவமோகன் தலைமையில் நடைபெற்றது.

சுதந்திர மனித அபிவிருத்திக்கழக உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பெருமெண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்மக்கள் மீது ஸ்ரீலங்காப்படையினர் மேற்கொள்ளும் அத்துமீறல்களைக் கண்டித்து பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன.

(க-145)

## காரைநகரில் மூதாட்டியின் சங்கிலி அறுப்பு!

ஊர்காவற்றுறை, ஜூலை 13

வயல் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வயோதிப மாது ஒருவரின் 3½ பவுண் தங்கச்சங்கிலி வழியில் அறுக்கப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை காரைநகர் பயிரிக்கூடல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த அம்பலவாணர் கனகம்மா என்ற 70 வயது மூதாட்டிக்கே இக்கதி ஏற்பட்டது.

இது குறித்து காரைநகரில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். தொடர்ந்து இளைஞரிடம் இருந்து தங்கச்சங்கிலி மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(க-16)

## தொண்டராசிரியர் பெயர்ப்பட்டியல்

தென்மராட்சி, ஜூலை 13

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்களில், கடந்த 31-12-1998க்கு முன்னர் உள்ள காலப்பகுதியைச் சேர்ந்தவர்களில் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களில் தெரிவுக்குத் தகுதியான 64 பேரினதும்—

கடந்த 31–12–1999 க்கு முன்னர் உள்ள காலப்பகுதியைச் சேர்ந்தவர்களில் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களில் தெரிவுக்குத்தகுதியான 24 பேரினதும் —

பெயர்ப்பட்டியல்கள் வலய அலுவலகத்திற்கு வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பெயர்ப்பட்டியலை வலய அலுவலகத்தில் பார்வையிடலாமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஜ-117)

## போதியளவு யூரியா கையிருப்பில்

வலி. தென்மேற்கு, ஜூலை 13

உடுவில் கமநலசேவை நிலையத்தில் போதியளவு யூரியா உரம் கையிருப்பில் உள்ளதாக பெரும்போக அலுவலர் தெரிவித்துள்ளார்.

பெரும்போக நெற் செய்கைக்கு விவசாயிகள் ஆயத்தமாகும் வேளையில், யூரியா மற்றும் உரவகைகள் இவ்வருடம் கொழும்பில் இருந்து பெருமளவில் தருவிக்கப்படவுள்ளன.

இதேவேளை —

கடந்த வருடமும் நெற்பயிர்களைக் கொல்லியாகப் பயன்படுத்தப்படும் எம். சீ. பீ. ஏ 40, 50 போன்றவைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது தெரிந்ததே.

(க-185)

## நிதியுதவி

ஊர்காவற்றுறை, ஜூலை 13

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 36 குடும்பங்களுக்கு மலசல கூடங்கள் திருத்துவதற்கான மானியமாக தலா 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

(க–15)


# கலாசாரப் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை

கோண்டாவில்,ஜூலை13

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கலாசாரப் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பதில் பிரதேச செயலாளர் பி.வேல்முருகோன்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாசாரப் பேரவை அங்கத்தவர்களையும் மற்றும் ஆர்வலர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (க-86)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 1932 - 01 - 06

மறைவு 2001 - 06 - 13

### செல்லஹன் சின்னக்கிளி (கஸ்ரோ)

*(முன்னாள் ஊழியர், சீமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)*

அன்புக்கும் பண்புக்கும் அணிகலனாய்த்
திகழ்ந்தீரே!
உங்களோடு வாழ்ந்த நாள்கள் வாழ்வில்
மறக்கமுடியாதவை
சிரிப்பான முகமும் கலகலப்பான பேச்சும்
நெஞ்சங்களில்
என்றும் நிலைத்துநின்று ஞாபகமூட்டிக்
கொண்டேயிருக்கும்!

இன்று (13.07.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*சந்தை வீதி,*
*காங்கேசன்துறை.*
தற்காலிக முகவரி:
*நிச்சாமம்,*
*சங்கானை.*

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(90028)

## யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர்

### திருக்குறள் வினாடிவினா இறுதிப்போட்டி - 2001

எமது கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த மேற்படி போட்டி, தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

- உபஅதிபர்.

(90025)

## வண்.வடமேற்கு - ஆனைக்கோட்டை

# ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயம்

## விஷு வருடம் - 2001

### மஹோற்சவ விஞ்ஞாபனம்

### 15.07.2001 முதல் 24.07.2001 வரை

| | | | |
|---|---|---|---|
| 15-07-2001 - ஞாயிறு | காலை | 11.00 மணி | கொடியேற்றம் |
| 16-07-2001 - திங்கள் | காலை | 10.00 மணி | பூச்சொரியும் விழா |
| 17-07-2001 - செவ்வாய் | காலை | 10.00 மணி | வேதபாராயணத்திருவிழா |
| 18-07-2001 - புதன் | மாலை | 6.00 மணி | கைலாசவாகனம் |
| 19-07-2001 - வியாழன் | காலை | 10.00 மணி | பக்திமுக்தி பாவனஉற்சவம் |
| 20-07-2001 - வெள்ளி | காலை | 10.00 மணி | சிவலிங்க சாத்துப்படி |
| 21-07-2001 - சனி | மாலை | 6.00 மணி | குதிரை வாகனம் |
| 22-07-2001 - ஞாயிறு | மாலை | 6.00 மணி | சப்பறத்திருவிழா |
| 23-07-2001 - திங்கள் | காலை | 10.00 மணி | இரதோற்சவம் |
| 24-07-2001 - செவ்வாய் | காலை | 10.00 மணி | தீர்த்தோற்சவம் |
| | மாலை | 8.00 மணி | கொடியிறக்க வைபவம் |
| 25-07-2001 - புதன் | மாலை | 8.00 மணி | பூங்காவனம் |

மஹோற்சவகுரு – தேவஸ்தானக்குரு

பிரதிஸ்டா பிரதமகுரு – ஈசான சிவாச்சாரியார்

### சிவஸ்ரீ இரங்க வரதராஜக்குருக்கள்

சொற்பொழிவு – மகாபாரதம் – மாலை 6.00 – 7.00

### அ.குமாரவேல்

(விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி)

அம்பாள் அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆலயதர்மகர்த்தா சபை,
இந்து இளைஞர் மன்றம்

*விளம்பர அன்பளிப்பு:-*

## எரிக்கணேஷ்

### பல்கட்டுமிடமும் மூக்குக் கண்ணாடி அகமும்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
T.P-2486

*கிளை:- 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.*
*கிளை:- 80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.*

(C/17400)

## சிறுவர் விளையாட்டு பெரியவர்களின் அடிதடியில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை13

சிறுபிள்ளைகளின் விளையாட்டுச் செயலால் ஏற்பட்ட தகராறு பெரியவர்களின் அடிதடியில் முடிந்தது.

இச்சம்பவத்தில் கொட்டன் அடிக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் தலையிலும் முகத்திலும் படுகாயமடைந்தனர்.

கல்வியங்காடு, இராசவீதிப் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பூபால் பாக்கியராஜ் (வயது 40), அவரது மகன் பாக்கியராஜ் விஜயராஜ் (வயது 15) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-15)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி வேலி மரங்களுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

மூளாயில் புதனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான இதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் ராகவன் (வயது 25) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

## காங்கேசன் முகாமில் திவ்வியன் உட்பட நால்வர் மட்டுமே!

யாழ்ப்பாணம்,ஜூலை13

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தற்போது 4 பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று முன்தினம் அங்கு சென்று கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவனான கிருஷ்ணசாமி திவ்வியன் (இமையாணன், உடுப்பிட்டி), மகேந்திரநாதன் சங்கர் (குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்), குமாரவேல் சுதாகரன் (பெரியபொக்கனை, வாதரவத்தை), செல்லன் சின்னராசா (நவாலிவடக்கு, மானிப்பாய்) ஆகிய நால்வருமே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர். (க-10)

## மிதிவெடியில் சிக்கி இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

தென்மராட்சிப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு காயமடைந்தார்.

மட்டுவில் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து சிறுப்பிட்டி மேற்கில் வசிக்கும் கந்தையா ஜனார்த்தனன் (வயது 21) என்பவரே காலில் காயமடைந்தவராவார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை முன்சில்லு மிதிவெடியில் ஏறியதால் மிதிவெடி வெடித்து காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15-72)

## விளையாட்டு விழா

வலி.தென்மேற்கு, ஜூலை13

மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்க பாலர் பாடசாலை விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு செல்வி இ.சுப்பையாப்பிள்ளை தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

விளையாட்டுவிழாவில் முதன்மை விருந்தினராக மருதடி விநாயகர் தர்மகர்த்தா சபைத் தலைவர் தா.சிதம்பரநடராஜா கலந்துகொள்வார்.(ஐ-185)

## யாருடையது?

கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்த ஒருவரின் பொருள்கள் அடங்கிய பை (BAG) ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பையில் கவிற்சலாந்து என்ற விலாசம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த பைக்கு உரியவர் கீழ் கண்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

வே.இராமநாதன்,
குருந்தடி, நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (90014)

## சான்றோனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நயினாதீவு மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் தற்போது வேலணைக் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும்

உயர்திரு.

### சோமசுந்தரம் தில்லைநாதன்

(B.A., Dip in Ed, SLPS-I)

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்குப் பதவி உயர்வு கிடைக்கப் பெற்றமையிட்டு எம் வித்தியாலய சமூகம் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் நீண்ட ஆயுளுடன் இருக்க, நயினை நாகபூஷணி அம்பாள் அருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி.

*யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.*
(C/17396)

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

## தூரிகை நுண்கலை வளாகம்

### மனைப்பொருளியல் பிரிவினரின்

# கண்காட்சி

*இடம்:-* தூரிகை நிறுவனம்
செங்குந்தா வீதி, கல்வியங்காடு

*காலம்:-* ஜூலை 14, 15
சனி, ஞாயிறு
காலை 9 மணி முதல் மாலை 5 வரை.

**அனைவரும் வருக!**

(90012) பயிலுநர்கள், ஆசிரியர்கள்.

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## லொறி உடற்கோப்பு அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

அசோக் லேலண்ட் பாரவூர்திக்கு உடற்கோப்பு அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் 19.07.2001 அம் திகதி பி.ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். உடற்கோப்புக்கான வேலை விவரங்கள் கேள்வி விண்ணப்பத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. கேள்வி விண்ணப்பப்பத்திரங்களை அலுவலக நாள்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை மீளளிக்கப்படாத படிவப்பணமாக ரூபா 100/= ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் "பொது முகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக்கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "பாரவூர்தி உடற்கோப்பு அமைப்பு" என எழுதப்படல் வேண்டும். உடற்கோப்பிற்கான கேள்வி நிபந்தனைகள் கேள்வி விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.

*நீர்வேலி.* (C/17402) - பொது முகாமையாளர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 17 - 09 - 1922

மறைவு 13 - 06 - 2001

### அமரர் சிவசுப்பிரமணியம் சிவஞானம்

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், நயினாதீவு மகா வித்தியாலயம்)

இன்று (13.07.2001) வெள்ளிக்கிழமை நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*
(90024)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி சசீகரன்

துன்னாலை, தாமரைக் குளத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரான்ஸில் வசித்துவருமான கனகசபாபதி சசீகரன் நேற்று முன்தினம் (11.07.2001) புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் வை.கனகசபாபதி, காலஞ்சென்ற திருமதி இ.கனகசபாபதி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சி.சிதம்பரப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், நளினியின் அன்புக் கணவரும், சங்கவி, நிருஷா, மிதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சன் (ஆஸ்திரேலியா), குமணன்(ஆஸ்திரேலியா), திருமதி த.காமேசன்(வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமரைக் குளத்தடி,*
*துன்னாலை,*
*கரவெட்டி.*
(90011)

தகவல்:
நா.சுபாஸ்சந்திரன்
(சிறிய தந்தை)

**Silver Shield**

தயாரிப்புக்களான

சொக்ஸ் வகைகள்,

நூல்வகைகள்,

பெனியன்கள்

பலதரப்பட்ட

**CURVFORM BRASSIERS**

இன்னும் பல.......

கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ள:

**Srimurugan**

303, K.K.S. Road, Jaffna.

Tel:- 021-3588, 2670 Fax:- 3214, email:- del-smskr@euraka.lk

குறிப்பு:- பாடசாலைகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும். (C/17337)





**நாகம்ஸ் சுன்னாகம்**

இன்று முதல் குதூகல ஆரம்பம்

சரத்குமார், மீனா,

சுவலட்சுமி, வடிவேல் நடித்த

இனிய பாடல்கள் நிறைந்த

**மாயி**

(ரீலஸ்)

காட்சிகள்: 11.00, 2.30

(புதிய நேரம்)

(90029)





**சிறுப்பிட்டி வடக்கு**

**கலைவாணி சனசமூக நிலையத்தினர் நடத்தும்**

மாபெரும் மாட்டுவண்டில்

சவாரிப் போட்டி

இடம்:- ஆவரங்கால் சவாரித்திடல்

காலம்:- 15-07-2001 ஞாயிறு பி.ப. 2.00 மணி

குறிப்பு:- 15-07-2001 இல் கந்தரோடை சவாரித்திடலில் மாட்டுவண்டில் சவாரி இடம்பெற மாட்டாது என்பதை அறியத்தருகின்றோம். - செயலாளர்.

(90020)



# நெஞ்சில் நிறைந்த சஞ்சீ...
## ஓராண்டு நினைவலைகள்

**மண்ணில்**

26 - 07 - 1982

**விண்ணில்**

13 - 07 - 2000



## சோமசுந்தரம் சஞ்சீவன்

*(யாழ்.இந்துக் கல்லூரி 2001 கணிதப் பிரிவு மாணவன்)*

அரும்புகின்ற மீசையுடன்
அழகனாய்த் தெரிந்தவனே
குருத்துவிட்ட மரமாகக்
குதூகலமாய்த் திரிந்தவனே
கரும்பாக இனித்தவனே
கல்வியிற் திகழ்ந்தவனே
வருசங்கள் போனாலும்
வானாளில் உனை மறவோம்!

**- நண்பர்கள்.**

(90036)

## புலிகள் தரப்பில் இருவர் மரணம்

வவுனியா,ஜூலை13

தமது தரப்பில் உயிரிழந்த இருவரின் பெயர்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி முகமாலையில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் விழுப்புண் அடைந்த எல்லைப் படை வீரர் பிரசன்னா அல்லது வெள்ளை (பாலேந்திரன் பிரசன்னா - கிளிநொச்சி) - என்பவர் கடந்த 10 ஆம் திகதியும் -

1999 நவம்பர் 3 ஆம் திகதி "ஓயாத அலைகள் - 3" நடவடிக்கையின்போது நெடுங்கேணிப் பகுதியில் விழுப்புண் அடைந்த வீரவேங்கை வெண்பிறை (நிஜனி நிர்மலகாந்தன் - யாழ்ப்பாணம்) என்பவர் நேற்று முன்தினமும் -

உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-ஒ)

## கண்டன அறிக்கை

வவுனியா,ஜூலை13

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டது மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது ஆகியவற்றுக்கு கண்டனம் தெரிவித்து, துனுக்காய் வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் கண்டன அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளனர். (உ-ஒ)

## கிரான்குளத்தில் மூவர் கொலை

மட்டக்களப்பு மாவட்டம் கிரான்குளத்தில் செங்கல் வியாபாரிகள் மூன்றுபேர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அம்பாறையில் இருந்து காத்தான்குடிக்குச் செங்கல் ஏற்றிவந்த இந்த வியாபாரிகள் லொறியுடன் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த லொறி முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, அந்தப் பிரதேசத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

விசேட அதிரடிப்படையினர் தகவலறிந்து கிரான்குளம் மற்றும் புதுக்குடியிருப்பு முகாம்களில் இருந்து அங்கு விரைந்து சென்ற சமயம் வழியில் சென்ற பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டனர்.

கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு படையினர் விரைந்தபோதிலும் பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## வருடாந்தக் கூட்டம்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(க-10)

## வன்முறையில்.....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை கிட்டும்வரை ஓயாது எமக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அன்பிற்குரிய பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகள் ஆகிய நாம் உங்களின் பிள்ளைகளின் நிம்மதியான வாழ்விற்காக பேரினவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து எமது சகாவை இழந்து நிற்கின்றோம். இன்று எமக்கு நடந்த இக்கொடூரம் நாளை உங்கள் வீட்டு வாசல் படியினை எட்டிப்பார்த்து உங்கள் கண்களையும் இரத்தம் சிந்த வைக்கும் கோரமான நிலையை உருவாக்குவதை நாம் விரும்பவில்லை. உங்கள் பிள்ளைகள் எமக்கு ஆதரவாக பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றபோது அவர்களுடன் இணைந்து நீங்களும் இந்த அநீதிக்கு எதிராகக் குரல் கொடுங்கள். பேரினவாத சாத்தான் உங்கள் கதவுகளைத் தட்டுமுன் உங்கள் கரங்களை எம்மோடு இணையுங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(உ)


**ராஜா யாழ்ப்பாணம்**

கடைசி வாரம்

9 வேடங்களில் நடித்த

அஜித்,

வசுந்துராதாஸ், நக்மா, மீனா

மற்றும் பலர் நடிப்பில்

**CITIZEN சிட்டிசன்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

(C/17266)

# இன்று வெள்ளி முதல் 4 தினங்கள் வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு

## புளொட் அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை13

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இன்று 13ஆம் திகதி வெள்ளி முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரையான நான்கு தினங்களை வீரமக்கள் தினமாக அனுஷ்டிக்கவுள்ளது.

உயிர்நீத்த தலைவர்கள், அனைத்து அமைப்புக்களைச் சேர்ந்த தளபதிகள், போராளிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து 12 ஆவது வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக புளொட் அறிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமரர் அமிர்தலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோரது நினைவு நாளான இன்று (ஜூலை13) தொடக்கம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஸ்தாபகரும் செயலதிபருமான அமரர் தோழர் க.உமாமகேஸ்வரனின் நினைவுநாளான எதிர்வரும் 16ஆம் திகதி வரை நான்கு தினங்களுக்கு வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படும்.

முதல் நாளான இன்று தந்தை செல்வாவின் நினைவு ஸ்தூபியில் மலரஞ்சலி செய்யப்பட்ட பின் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைப்பின் உறுப்பினர்கள் இரத்ததானம் வழங்குவர். தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் நாள்களில் சிரமதானப் பணிகள் இடம்பெறும்.

இறுதிநாள் நினைவாக செயலதிபரின் மலரஞ்சலி நிகழ்வும், யாழ். முற்றவெளி மைதானத்தில் அமைந்துள்ள உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவு ஸ்தூபியின் பெயர் முகப்பு வளைவு திறந்து வைக்கப்பட்டு நினைவுதினப் பேருரைகள் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம் என்று புளொட் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மட்டுநகர் பாடசாலைகளிலும் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு,ஜூலை13

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை விடுதலை செய்யும்படியும் யாழ்.பல்கலைக்கழகத்தைத் திறக்கக் கோரியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் இன்று முதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதிக்கவிருக்கின்றனர்.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் அதனோடு இணைந்த கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (உ-3)

## தனங்களப்பில் வெடிப்பொருள்கள் மீட்பு

கொழும்பு,ஜூலை13

தனங்களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட சுத்திகரிப்புப் பணியின் போது ஒரு ஆர்.பி.ஜி வெடிகுண்டு, 60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்று மற்றும் 9 கைஎறி குண்டுகள் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட கள நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பாடசாலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலை மாணவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் சில இடங்களில் மாணவர்கள் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

பிரபல பாடசாலைகளின் அதிபர்களை ஞானம்ஸ் ஹோட்டலில் உள்ள படையணி அலுவலகத்துக்கு நேற்று அழைத்த யாழ். பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தற்போதைய நிலை குறித்து அவர்களுடன் கலந்துரையாடினர்.

(உ-3-10-15-11-51-29-31-173-175-117-139)

## ஜனாதிபதி மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை13

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி இரண்டு மாதங்கள் ஒத்திவைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 19 ஆம் திகதி கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கின்றது என்று அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பத்து லட்சம் பேர் பங்கு பற்றுவர் என்றும் அவர் மேலும் சொன்னார். (உ-3)

## மு.காவின் எம்.பிக்களிடம் விளக்கம்

கொழும்பு,ஜூலை13

அரசில் இருந்து வெளியேறியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்தின தெரிவித்தார்.

விளக்கம் அளிப்பதற்கு அவர்களுக்கு ஒருவார காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து தேர்தலில் இவர்கள் போட்டியிட்டே நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(உ-3)

## வவுனியாவில் சுற்றிவளைப்பு

வவுனியா,ஜூலை13

வவுனியா வீரபுரம் பகுதியில் நேற்று இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பு, தேடுதல் நடத்தினர். (ஒ)


**கலைக் கல்லூரி**
யாழ்.நகர்
மனோகராச் சந்தி அருகில்

**A/L 2001**
துரித வினாவிடை வகுப்புக்கள்
ஆரம்பம்:-
15-07-2K1 ஞாயிறு(a.m.)

9.00 தமிழ்
11.00 இந்து நாகரிகம்
12.00 இந்து சமயம் } கமலநாதன்
10.00 அளவையியல் - S.R.J. சிதன்.
12.00 புவியியல் - தென்மராட்சி பிரபல ஆசிரியர்
(90007)



**BIT தெரிவுப் பரீட்சை 21.07.2001**

Colombo பல்கலைக்கழகத்தின் BIT பட்டக் கல்விக்கான தெரிவுப் பரீட்சை 21-07-2001 அன்று நடைபெறவிருப்பதால் யாழ்.குடாநாட்டில் இருந்து விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்குமான வழிகாட்டல் வகுப்புகளும் முன்னோடிப் பரீட்சையும் 14 ஆம், 15 ஆம் (சனி,ஞாயிறு) திகதிகளில் பி.ப. 2.00 மணி முதல் நடைபெறவுள்ளன.

விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்.
(C/17403)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
லவ்லி
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்
அல்டி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/17407)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
கார்த்திக்கின்
லவ்லி
பிரதிகளை உடன் பெறலாம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/17405)


## எதிர்க்கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெறுவதாக இருந்த இந்தச் சந்திப்பு கடைசி நிமிடத்தில் சபாநாயகர் வராததால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆயினும், அங்கு வந்திருந்த ஐ.தே.க. உறுப்பினர்களான கரு ஜயசூரிய, டிரோன் பெர்னாண்டோ, மகிந்த சமரசிங்க, கே.என்.சொக்ஸி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, தமிழர் விடுதலைக்கூட்டணி சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, சிஹல உறுமய செயலாளர் சம்பக ரணவக்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரிடையே ஜனாதிபதியின் இரு தீர்மானங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதென பொது இணக்கம் காணப்பட்டது.

முன்னதாக நேற்று முன்தினம் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவின் 'றொஸ்மிட் பிளேஸ்' இல்லத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். (உ-ஒ)

## உயர்தர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- பழைய பாடத்திட்டத்தின் கீழான - பரீட்சைக்கு 34 ஆயிரத்து 64 மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றுகின்றனர். பாடசாலைகளில் இருந்து பழைய பாடத்திட்டத்துக்கான பரீட்சைக்கு எவரும் தோற்றவில்லை.

மூன்று பாடங்களைக்கொண்ட புதிய பாடத்திட்டத்தின் கீழான பரீட்சைக்கு பாடசாலைகளில் இருந்து ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 541 பேரும், தனிப்பட்ட முறையில் நாலாயிரத்து 922 பேரும் தோற்றுகின்றனர். (உ-3)

## பல்கலைக்கழக.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகச் சூழலிலும் வெளியிலும் தற்போது நிலவும் அசாதாரண நிலை குறித்துக் குழுவின் கட்டளை அதிகாரிக்கு விவரமாக எடுத்துக்கூறி நிலைமை வழமைக்குத் திரும்புவதற்கு திவ்வியனின் விடுதலை மிக அவசியமானது என வலியுறுத்தினர். மேலும் திவ்வியன் விடுதலை செய்யப்படாதவிடத்து தற்போது நிலவும் அமைதியற்ற நிலையைச் சீர் செய்யமுடியாது எனச் சுட்டிக்காட்டினர்.

இப்பேச்சுக்களின்போது திவ்வியனின் விடுதலையைத் துரிதப்படுத்துவதற்கும் பல்கலைக்கழகத்தை மீளத் திறப்பதற்கும் சில தினங்களுக்காவது அமைதியான சூழல் நிலவவேண்டியது அவசியமானது எனப் பாதுகாப்புப் படையினர் கருதுவதாகக் குழுவினரால் உய்த்துணரப்பட்டது.

மாணவப் பிரதிநிதிகள் விரும்பும் பட்சத்தில் இப்பிரச்சினைகள் பற்றித் தம்முடன் எதுவித அச்சவுணர்வுமின்றிப் புரிந்துணர்வு மனப்பான்மையுடன் கலந்துரையாடலாம் என மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலா குழுவினருக்குத் தெரியப்படுத்தி அதனை மாணவப் பிரதிநிதிகளுக்கும் கூறுமாறும் கேட்டுக்கொண்டார். மாணவர்கள் விரும்பினால் அதற்கான ஒழுங்குகளை செய்துகொடுப்பதாகத் துணை வேந்தர் கூறினார்.

இவ்விடயங்கள் சம்பந்தமாகத் தீர்வொன்றைக் காண்பதற்குத் தொடர்ந்தும் கலந்துரையாடி முயற்சிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (உ-ஒ)

## பகிஷ்கரிப்பை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளனர்.

மாணவரின் கல்வி பாழடிக்கப்பட்டால் அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படும். எனவே மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிடவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டும் - என்றுள்ளது. (உ-3-10)


உ
சிவமயம்.

# அந்தியேட்டி அழைப்பு

05 * 02 * 1938



14 * 06 * 2001

## திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி

எம் அன்புக்குரியவர்களே!

எங்கள் குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தியறிந்து தாங்கள் எமக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி, துயர் பகிர்ந்து ஆறுதலளித்தமைக்கு என்றென்றும் நன்றியுடையோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 14.07.2001 (சனிக்கிழமை) அதிகாலை ஆரம்பமாகி 9.30 மணியளவில் கல்லெடுப்பு இடம் பெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற சபிண்டீகரண கிரியைகள், மதியபோசன வைபவம் என்பவற்றிலும் தங்களை குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

தயவு செய்து, இப்பத்திரிகை அறிவித்தலை உங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி பணிவாக வேண்டுகின்றோம். நாம் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்திக்க முடியாமலிருப்பதற்கான காரணங்களை தாங்கள் புரிந்து கொண்டு எம்மை மன்னித்து நிச்சயம் வருகை தருவீர்களென நம்புகின்றோம்.

குறிப்பு:- நாளை மறுதினம் (15.07.01 -ஞாயிறுக்கிழமை) மு.ப 11.30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அமரரின் ஆத்ம சாந்திக்கான பஜனையும் தொடர்ந்து மதியபோசன வைபவமும் இடம் பெறவுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி,

குடும்பத்தினர்


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணி சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, உரும்பிராய் இந்துக்கல்லூரி)*

உரும்பிராய் சந்தியடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியையுமான திருமதி தவமணி சுப்பிரமணியம் நேற்று (12-07-2001) வியாழன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர் சின்னப்பு சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி சின்னம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியை திருமதி சரஸ்வதி குமாரசாமியின் ஏக சகோதரியும் காலஞ்சென்ற குகதாஸ் (ஜேர்மனி) மற்றும் மோகனதாஸ் (லண்டன்), நாகப்பிரபா (உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமணி (ஜேர்மனி), அமிர்தகௌரி (லண்டன்), கமலசேகரம் (நில அளவையாளர் உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரமேஸ் (கனடா), சதீஸ் (ஜேர்மனி), திவ்வியா (ஜேர்மனி), சுதா (லண்டன்), தனுசா (லண்டன்), சோபனா (தேசிய கல்வியியற் கல்லூரி 1ஆம் வருட மாணவி), மோகனா (உடுவில் மகளிர் கல்லூரி - பழைய மாணவி) ஆகியோரின் பிரியமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பிரபை மஹால்"*
*உரும்பிராய்ச் சந்தி.*

தகவல்:-
அ.கமலசேகரம் - மருமகன்
(நில அளவையாளர்)

(C/17408)

## திருமதி இராசலட்சுமி கனகரத்தினம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய திருமதி இராசலட்சுமி கனகரத்தினம் நேற்று (12-07-2001) வியாழன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் சின்னத்துரை இராசம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பு இலட்சுமியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் (முன்னாள் அதிபர் - றோயல் கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம், பனை மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், சாந்தினியின் ஆருயிர் தாயாரும் திருவாதவூரனின் (சிரேஷ்ட உதவி நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம்) பாசமிகு மாமியாரும், கனிஷ்கா (சைவ மங்கையர் வித்தியாலயம்), சங்கராத்மஜன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்ற டாக்டர் பாலசுப்பிரமணியம் (லண்டன்), திருமதி மகேஸ்வரி (பேபி), காலஞ்சென்ற இராஜேந்திரம் (லண்டன்), திருமதி கமலேஸ்வரி (பாப்பா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி தனலட்சுமி, நவரத்தினம் (ஓய்வு பெற்ற உதவிக் கணக்காய்வாளர்), திருமதி சரோஜினி (லண்டன்), அரியநாயகம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற லிங்கநாயகம், திருமதி கௌரி ரவீந்திரன் (ஆஸ்திரேலியா), திருமதி தர்மினி குகானந்தன் (ஆஸ்திரேலியா), திருமதி வாசுகி சசீந்திரன் (விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு), குகன், லிங்கேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் சுசீலா (இந்தியா), சுசீலா நந்தபாலன், குமுதினி மனோஜ், நளினி பென், ரஞ்சன், ரதி (லண்டன்), காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15-07-2001) ஞாயிற்றுக்கிழமை ஜெயரத்தின மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் மாலை 5 மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6/3, சி.டி.ஐ. தொடர்மாடி,*
*104, மணிங் வீதி,*
*வெள்ளவத்தை*
*தொ.எண்:074-510680*

தகவல்:-
திருமதி சாந்தினி திருவாதவூரர்
(மகள்)

(C/17409)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.